
ஜனவரி 2013 January | இதழ் 264 ISSUE

# தமிழர் தகவல்

# TAMILS' INFORMATION













22 வது ஆண்டு
nd Year

Growing
with the
Community
ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

# நம்பிக்கையில்லா நம்பிக்கை

நம்பிக்கையுடன் பிறந்த 2012, எங்கள் எதிர்பார்ப்பைப் பூரணமாக நிறைவேற்றாத நிலையில் எம்மிடமிருந்து விடைபெற்றுள்ளது.

இதனால் நம்பிக்கையில்லா நம்பிக்கையுடன் 2013ஐ வரவேற்கின்றோம்.

இந்த ஆண்டில் உலகம் முழுவதும் அன்பு தழைத்தோங்க வேண்டுமென பொதுநலவாய நாடுகளின் தலைவியான எலிசபெத் மகாராணி தமது செய்தியில் தெரிவித்துள்ளார். எங்கும் சமாதானம் நிலவட்டும் என்று பாப்பரசர் ஆசி வழங்கியுள்ளார். கனடியர் அனைவருக்கும் ஆரோக்கிய வாழ்வு (healthy life) கிடைக்க வேண்டுமென இந்நாட்டின் ஆளுநர் நாயகம் (கவர்னர் ஜெனரல்) தமது புத்தாண்டுச் செய்தியில் வேண்டியுள்ளார்.

உலக மக்களால் தேடப்படுபவைகளை உணர்ந்து அவை கிடைக்க இவர்கள் வேண்டியுள்ளனர். அன்பும், சமாதானமும், ஆரோக்கிய வாழ்வும் கிடைக்குமானால், வாழ்வே வசந்தம்தான்!

இலங்கையில் இவை எதுவுமே கிடையாது. காட்டுமிராண்டி ஆட்சியாளர்கள், கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாதம், ஜனநாயகத்தை இருட்டில் தேடும் மக்கள். இதுதான் இலங்கை நிலைவரம்.

அண்ணனிடம் நாடாளுமன்றம் அடமானம். முதலாவது தம்பி சர்வ அதிகார ஜனாதிபதி. இரண்டாம் தம்பி பாதுகாப்பு என்ற பெயரில் பயங்கரவாதம் புரிபவர். கடைசித் தம்பி நாட்டின் பொருளாதாரத்தில் தொண்ணூறு வீதத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பி ‘பத்து வீத கமிஷன்’ பெறுபவர்.

அன்பு, சமாதானம், ஆரோக்கிய வாழ்வை இலங்கையில் எங்கு தேடினாலும் கிடையாது. சிலவேளை அலரி மாளிகைக்குள் அவை பதுக்கப்பட்டிருக்கலாம்.

தமிழ் பிரதேசங்கள் சிங்களத்தின் அடாவடிக்குள் சிக்கியுள்ளன. எவராவது ஒருவர் வீதியில் தடுக்கி வீழ்ந்தால், அவரைத் தள்ளிவிடும் கை சிங்களச் சிப்பாயினுடையதாகவே இருக்கும். சந்திகளிலும் சந்தைகளிலும் புத்தர் சிலைகள் திடீர் திடீரென முளைக்கின்றன.

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் என்று கதை பரப்பப்படுகின்றது. தமிழ் இளைஞர் கைதுகள் தொடருமென்கிறார் இராணுவப் பேச்சாளர். கைதானவர்கள் நீதிமன்றம் கொண்டு செல்லப்படுவதில்லை. மாறாக, புனர்வாழ்வு (?) அளிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தை இலக்கு வைத்து இராணுவம் காய்களை நகர்த்துகின்றது. தமிழ் மாணவர் கல்விக்குச் சாவுமணி அடிக்கும் சதிமுயற்சி இது.

தமிழர் ஒன்றுபட்டுக் கண்களை விழிக்கத் தவறினால், குடாநாட்டை இன்னொரு முள்ளிவாய்க்காலாக்கி விடுவார்கள். கவனம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## 22 ஆண்டுகள் பூர்த்தி மலர் வெளியீடும் வருடாந்த விருது விழாவும் பெப்ரவரி 10

கனடியத் தமிழர்களின் தனித்துவ அடையாளமாகவும், மூத்த தமிழ் ஊடகமாகவும் மிளிரும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் இருபத்தியிரண்டு ஆண்டுகள் பூர்த்தி மலர் வெளியீடும், வருடாந்த விருது விழாவும் இணைந்த வைபவம், அடுத்த மாதம் (பெப்ரவரி) பத்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னைய ஆண்டுகளைப் போன்று ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா பீடத்தில் (Council Chamber of the Toronto City Hall) பெப்ரவரி பத்தாம் திகதி பிற்பகல் விழா நடைபெறும்.

1992ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு பெப்ரவரி மாதத்திலும் வரும் இரண்டாம் வார இறுதியில் நடைபெறும் இவ்விழாவிற்கு அழைக்கப்படுபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இருபத்தியிரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவில் கலந்து கொள்பவர்களுக்கான அழைப்பிதழ்கள் இந்த மாதம் (ஜனவரி) 29ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இதற்கு முன்னர் எப்போதும் விழாவில் பங்குபற்றாதவர்கள் இம்முறை பங்குபற்ற விரும்பினால், 416 920 9250 இலக்கத்தை அழைத்து தங்கள் பெயரையும், தொலைபேசி இலக்கத்தையும் விபரமாக அங்கு பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

ஆண்டு மலரின் பிரதியொன்றைக் கனடாவில் வதியும் யாராவது தபாலில் பெற விரும்பினால், அதற்குரிய தபாற்செலவுக்காக ஏழு டாலர்களுக்கான காசோலை அல்லது மணி ஓடருடன், தங்களின் பெயர், விலாசம் ஆகியவற்றை விளக்கமாக ஆங்கிலத்தில் எழுதி அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

**தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Tamils' Information
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario. M4Y 2L4

## குடிவரவு மோசடியில் சிக்கிய கனடியரின் பிரஜாவுரிமை பறிமுதல் ஆரம்பம்!
## இலங்கை விசா விண்ணப்பதாரிகளின் கைவிரல் அடையாளப் பதிவு கட்டாயம்!

### Immigration fraud crackdown drastically increases the number of Canadians having their citizenship revoked

பொய்யான தகவல்களை வழங்கி கனடிய குடியுரிமை பெற்ற பின்னர் கனடியப் பிரஜாவுரிமை பெற்றவர்களின் பிரஜாவுரிமையை மீளப்பெறும் நடவடிக்கையை கனடிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அடையாளம் காணப்பட்ட 530 பேருக்கு பிரஜாவுரிமை நீக்க முதலாவது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சுமார் 5100 பேர் பொய்யான/தவறான தகவல்களை வழங்கிப் பிரஜாவுரிமை பெற்றுள்ளதாக குடிவரவு அமைச்சு தெரிவித்துள்ளது.

முதற் கடிதம் பெற்றவர்கள் அதனை ஆட்சேபித்து மத்திய நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியும். குடிவரவு ஆலோசகர்கள் (Immigration Consultants) என்று சொல்லப்படுபவர்களே சில மோசடிகளுக்குப் பின்னணியில் இருந்துள்ளதாக குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் ஜேசன் கெனி சுட்டிக்காட்டியுள்ளார்.

'கனடிய பிரஜாவுரிமை விற்பனைச் சரக்கல்ல' என்று அமைச்சர் கெனி கடந்த வருட நடுப்பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தார். கனடிய பிரஜாவுரிமையின் பெறுமதியையும் நம்பகத் தன்மையையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒருவரது கனடியப் பிரஜாவுரிமையை மீளப்பறிக்க (ரத்துச்செய்ய) கால எல்லை நிர்ணயிக்கப்படவில்லை. எத்தனை வருடங்கள் கனடாவில் வாழ்ந்திருந்தாலும், அது பிரஜாவுரிமை பறிப்பைத் தடுக்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களும் பிரஜாவுரிமையை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

### Canadian visa applicants from 29 countries including Sri Lanka will be fingerprinted

கனடாவுக்கு விஜயம் செய்வதற்கு விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களில் 29 நாடுகளைச் சேர்ந்தவர்கள் கைவிரல் அடையாளத்தை வழங்கும் சட்டம் இந்த மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது. குறிப்பிட்ட 29 நாடுகளின் பெயர்களையும் குடிவரவுத் திணைக்களம் பகிரங்கப்படுத்தியுள்ளது. இதில் சிறீலங்காவும் அடங்கும். குறிப்பிட்ட 29 நாடுகளில் ஆசிய ஆபிரிக்க நாடுகளே அதிகமானவை.

Bip,metrics Data Collection என்னும் நடைமுறையின் கீழ் 29 நாடுகளைச் சேர்ந்தவர்களின் கைவிரல் அடையாளம் பெறப்படும். இதற்கென விசா விண்ணப்பதாரிகளிடமிருந்து மேலதிகமாக 85 டாலர்கள் கட்டணமாக அறவிடப்படும். கைவிரல் அடையாளம் சேகரிக்கும் செலவில் 50 வீதத்தை மட்டுமே 85 டாலர்கள் அடக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012ல் சூப்பர் விசாவுக்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பித்த 15,581 பேரில் 13,216 பேருக்கு முடிவு எட்டப்பட்டது. 87 சதவீதமானவர்களுக்கு சூப்பர் விசா வழங்கப்பட்டது. 13 வீதமானவர்களின் விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. சூப்பர் விசா பத்து வருட கால எல்லையைக் கொண்டது.●



செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாண முதல்வராக மூன்று தடவைகளும் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக மாகாண லிபரல் தலைவராகவுமிருந்த டால்ரன் மக்கன்ரி கடந்த அக்டோபரில் இரு பதவிகளையும் துறந்துவிட்டார். கனடிய பத்திரிகைகள் தொடர்பாக மைய ஊடக-மொன்றுக்கு அண்மையில் அவர் வழங்கிய செவ்வியில், "பத்திரிகைகளில் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் செய்திகளைப் படித்த பின்னரே நான் முதல் பக்கச் செய்திகளைப் படிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். அவ்வளவுக்கு அவர் பற்றி வந்த செய்திகளால் அவரது மனம் நோகடிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது அவரது கருத்து.

ஆட்சி புரிய முடியாது தத்தளிக்கும் ஒன்ராறியோ அரசின் மற்றொரு விடயம் அம்பலமாகியுள்ளது. மாகாணத்திலுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிடமிருந்து வரவேண்டிய 1.4 பில்லியன் டாலர் வரியை அறவிடமுடியாது மாகாண அரசு திண்டாடுவதாக உள்ளக கணக்காளர் நாயகம் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். புதிய எச்.எஸ்.ரி வரி அமுலுக்கு வந்த பின்னர் மாகாண அலுவலர்கள் பலர் மத்திய அரசின் கீழ் சென்று விட்டதால் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையே இதற்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைச் சில வணிக நிறுவனங்கள் தமக்குச் சாதகமாக்கி வருகின்றனவாம்.

கனடாவிலுள்ள புதிய குடிவரவாளர்களும் ஏழை மக்களும் சட்டபூர்வமான நீதியைப் பெற்றுக்கொள்வதில் பல கட்டுப்பாடுகளை எதிர்கொள்வதாகவும், இவர்களுக்கு எதிராகப் பாகுபாடு இடம்பெறுவதாகவும் 'உலக நீதித் திட்டம்' என்னும் அமைப்பு தனது அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. குறைந்த சம்பள வேலைகளுக்கே புதிய குடிவரவாளர்கள் வேண்டப்படுவதாகவும், வெள்ளை நிறத்தவரல்லாத மற்றையவர்கள் ஏழைகளாக இருந்து வருகின்றனரென்றும், இவர்கள் அரசாங்க வேலைகளைப் பெறமுடியாதிருக்கின்றனர் என்றும் இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

கனடிய லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கு இந்த வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் மொன்றியல, பிரதேச நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் விண்வெளிப் பயண வீரருமான மார்க் கார்னோ போட்டியிடவுள்ளார். தலைமைப் பதவிக்கான பிரசாரத்தில் ஏற்கனவே ஈடுபட்டிருக்கும் ஜஸ்டின் ரூடோவும் மொன்றியல் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினராவார். சமீபத்திய கருத்துக் கணிப்புகளின்படி ஜஸ்டின் ரூடோவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகமிருப்பது தெரியவந்துள்ளது. சிறுபான்மை மக்களின் பகுதிகளிலும், மேற்குக் கனடாவிலும் ஜஸ்டின் ரூடோ சூறாவளிப் பிரசாரத்தைத் தற்போது மேற்கொண்டு வருகின்றார்.

உலகில் மக்களின் தரமான வாழ்வுக்கு உகந்ததாகத் தெரிவான முதல் முப்பத்தைந்து நாடுகளில் கனடாவின் ஐந்து இடங்கள் இடம்பெறுகின்றன. இந்த ஐந்து நகரங்களில் வன்கூவர் முதலிடத்தில் உள்ளது. கனடாவில் தெரிவான ஐந்து நகரங்களும் முதல் முப்பத்தைந்துக்குள் இடம்பெறும் தர வரிசை பின்வருமாறு. முப்பத்தைந்துக்குள் இடம்பெறும் தர வரிசை பின்வருமாறு. வன்கூவர் - ஐந்தாம் இடம். ஒட்டாவா - 14, ரொறன்ரோ - 15, மொன்றியல் - 23, கல்கேரி - 32. கனடாவிலுள்ள மேர்சர் என்னும் ஆய்வமைப்பு இந்தத் தெரிவை நடத்தியது. உலகின் மிகச் சிறந்த நகரமாக வியன்னாவும் இரண்டாமிடத்தில் சூரிச்சும் தெரிவாகியுள்ளன.

கனடாவின் தொழிற்சங்கங்களின் நிதி விவகாரங்களை அவை பகிரங்கப்படுத்த வேண்டுமென்பதைக் கட்டாயமாக்கும் தனிப்பட்ட உறுப்பினர் பிரேரணையொன்று கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆளும் கட்சியான கன்சர்வேடிவ்வின் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த றஸ் ஹேபர்ட் என்பவரால் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்க்கட்சியினர் இதற்கு எதிராகவே வாக்களித்தனர். கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து இப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்தது குறிப்பிடத்தக்கது. தொழிற்சங்கங்களின் மீதான திட்டமிட்ட தாக்குதல் இது என இவர்கள் தெரிவித்தனர்.

## கனடிய கடவுச்சீட்டு கட்டணம் அதிகரிப்பு

கனடிய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) கட்டணம் இந்த வருடத்தில் அதிகரிக்கப்படவுள்ளது. தற்போது 87 டாலர்களாகவிருககும் வளர்ந்தோருக்கான ஐந்து வருட கடவுச் சீட்டின் கட்டணம் 120 டாலர்களாக அதிகரிக்கும். சிறுவர்களுக்கான கட்டணம் 20 டாலர்களால் அதிகரித்து 57 டாலர்களாகும். தொலைந்த அல்லது திருடப்பட்டவைக்கான மாற்றீடுக் கடவுச்சீட்டுக்கு 45 டாலர்கள் அறவிடப்படும். இவ்வருடம் ஜுலை மாதத்தில் அறிமுகமாகவுள்ள பத்து வருட பாவனைக்கான கடவுச்சீட்டின் கட்டணம் 160 டாலர்களாகவிருக்கும்.

## வாகன காப்புறுதிக் கட்டணம் இவ்வருடம் குறையலாம்

ரொறன்ரோ பெரும்பாகத்தில் வாகனக் காப்புறுதிக் கட்டணத்தில் குறைவு ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2011ஆம் ஆண்டில் மோசடி மூலம் வாகனக் காப்புறுதி விண்ணப்பித்தவர்கள் தொகை குறைவானதால், காப்புறுதி நிறுவனங்கள் இந்த வருடத்தில் கட்டணத்தைக் குறைக்க ஆலோசித்து வருகின்றன. இதற்கு முன்னோடியாக பிரதான காப்புறுதி நிறுவனமொன்று தனது வாடிக்கையாளர்கள் செலுத்தவேண்டிய கட்டணத்தில் குறைப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கனடிய 'பெனி' விடைபெறுகிறது

கனடாவில் 'பெனி' என்றழைக்கப்படும் ஒரு சதக் குற்றி அடுத்த மாதம் (பெப்ரவரி) நான்காம் திகதியிலிருந்து விடைபெறவுள்ளது. ஒரு சதமான 'பெனி'யைத் தயாரிக்க அதனிலும் கூடிய பணம் செலவாவதும், ஒரு சதமென்பது பாவனையில் பெறுமதியில்லாதிருப்பதுமே இதனைப் பாவனையிலிருந்து நீக்க அரசாங்கம் முடிவெடுக்கக் காரணமானது. பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கும் பின்னர் வர்த்தக நிலையங்களுக்குக் கைமாறும் 'பெனி' வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும். அவை மீண்டும் பாவனைக்கு வரமாட்டாது. தற்போது சுமார் ஆறு பில்லியன் 'பெனி'கள் பாவனையிலிருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் ஆட்சியைக் கைப்பற்றுவோம்! என். டி. பி தலைவர் தோமஸ் உறுதி



அடுத்த பொதுத் தேர்தலில் கனடிய ஆட்சியை என். டி. பி நிச்சயம் கைப்பற்றுமென்று அதன் தலைவர் தோமஸ் மல்கெயர் தெரிவித்துள்ளார். ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் ஆட்சிக்கு வந்த பின்னர் கனடா மேலும் 150 பில்லியன் டாலர்கள் கடனாளியாகியுள்ளது என்றும் இதிலிருந்து ஒரு மாற்றத்தைத் தங்களால் மட்டுமே கொண்டுவர முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். பிரிட்டிஷ் கொலம்பியா, சச்கச்சுவான், மனிரோபா, நோவாஸ்கோஷியா ஆகிய மாகாணங்களின் நிதி நிலைமையை அங்கு என். டி. பி அரசாங்கங்கள் வெற்றிகரமாக்கியதைச் சுட்டிக்காட்டிய தோமஸ், ஒன்ராறியோவில் பொப் றே தலைமையில் என். டி. பி நடத்திய ஆட்சியை மக்கள் மறந்துவிட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். என் டி. பி கட்சியையும் அதன் தலைவரையும் பெரும்பான்மையான கனடியர்கள் விரும்புவதை அண்மைய கருத்துக் கணிப்புகள் வெளிக்காட்டுகின்றன.●

# கனடிய நகர முதல்வர்களுக்கு ராசியில்லாத வருடம் 2012

கனடாவின் பல நகர முதல்வர்களுக்கு (மேயர்கள்) 2012ஆம் ஆண்டு ராசியில்லாத ஆண்டாக அமைந்துவிட்டது. மொன்றியல் நகரசபையின் மேயர் பல்வேறு ஒப்பந்தங்களிலும், திட்டமிட்ட குற்ற நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது. கல்கேரி மேயர் காதல் விவகாரமொன்றில் சிக்குண்டு பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறார். மிசிசாகா மேயர் தமது மகனின் வர்த்தக முயற்சி விவகாரமொன்றில் அவருக்குச் சாதகமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டில் அகப்பட்டுள்ளார். ரொறன்ரோ நகர மேயர் விடயங்களை விபரிக்கத் தேவையில்லை. விருப்பம் கலந்த முரண்பாடு சம்பந்தப்பட்ட உதைபந்தாட்டக் குழு நிதி விடயத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு மேன்முறையீடு செய்து காத்திருக்கிறார். 2013ல் இவர்களில் யார் யார் பதவி இழப்பார்களோ தெரியாது.●

# றொப் ஃபோர்ட்டின் மூன்றாம் கண்டம்; அடுத்த மேயர் தேர்தலில் ஒலிவியா!





ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட்டின் மூன்றாம் கண்டம் இந்த மாதம் ஏழாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. 'விருப்பம் கலந்த முரண்பாடு' வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட இவருக்கு, பதவி நீக்க உத்தரவு வழங்கப்பட்டது. ஆனாலும், அதற்கு பதினான்கு நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டதுடன், மீண்டும் புதிய மேயர் தேர்தலில் அவர் போட்டியிடலாமெனவும் நீதிபதி தெரிவித்திருந்தார். இந்தத் தீர்ப்பினை ஆட்சேபித்து அவர் மேன்முறையீடு செய்ததால், அதன் விசாரணை முடிவுற்று தீர்ப்பு வழங்கப்படும்வரை பதவியில் தொடர மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதித்தது. மேன்முறையீட்டு விசாரணை இந்த மாதம் ஏழாம் திகதி ஆரம்பமாகின்றது. தீர்ப்பு விரைவாக வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தீர்ப்பு மேயருக்குப் பாதகமாக அமையுமாயின் அவர் பதவி இழப்பார். எஞ்சியிருக்கும் இருபது மாதங்களுக்குப் புதிய மேயராக தற்போதைய அங்கத்தவர்களில் ஒருவரை நகரசபை உறுப்பினர்கள் நியமிக்கலாம். அல்லது புதிய மேயருக்கு ஏழு மில்லியன் டாலர் செலவில் தேர்தலை நடத்தலாம். அவ்வாறு தேர்தல் நடைபெறுமாயின் றொப் ஃபோர்ட் மீண்டும் போட்டியிடலாம். அல்லது அவரது சகோதரரான நகரசபை உறுப்பினர் டக் ஃபோர்ட் போட்டியிடலாமெனத் தெரிகின்றது.

தற்போது ஸ்படைனா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கும் ஒலிவியா சோ (ஜாக் லேட்டனின் மனைவி) எதிரணி வேட்பாளராக மேயர் தேர்தலில் குதிக்கலாமெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் முன்னர் ரொறன்ரோ நகரசபை உறுப்பினராகவிருந்தவர்.●

# அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக ஹவாய் இந்துப்பெண்



அமெரிக்காவின் புதிய நாடாளுமன்ற உறுப்பினராக ஹவாயிலிருந்து தெரிவாகியுள்ள நால்வரில் ஒருவர் இந்துப் பெண். துளிசி கப்பார்ட் என்னும் இவர் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். ஹவாய் தேசிய பாதுகாப்புப் படையில் சில வருடங்கள் பணியாற்றிய இவர், தமது 31வது வயதில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ளார். அடுத்த மாதம் நடைபெறவுள்ள பதவியேற்பு வைபவத்தில் பகவத்கீதையின் மீது சத்தியப் பிரமாணம் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். அமெரிக்க வரலாற்றில் பகவத்கீதையின் மீது பதவிப் பிரமாணம் எடுக்கும் முதலாவது உறுப்பினராக இவரே அமைவார் என்று பல ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மகாத்மா காந்தியின் கொள்ளுப்பேரனும் தேர்தலில் வெற்றி



இந்த தேசபிதா மகாத்மா காந்தியின் கொள்ளுப்பேரன் சாந்தி காந்தி, அமெரிக்கவின் கான்சாஸ் மாநில சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று புதிய உறுப்பினராகியுள்ளார். காந்தியின் பேரனான மறைந்த காந்திலால் - சரஸ்வதி தம்பதிகளின் மகன் சாந்தி காந்தி. தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட கனநாயகக் கட்சி வேட்பாளரைவிட ஒன்பது வீத மேலதிக வாக்குகளால் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றுள்ளார்.

# முன்னாள் ஜனாதிபதிகள் முதுமை நோயில்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி (சீனியர்) எச். டபிள்யு. புஷ் (88), மற்றும் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மன்டேலா (91) இருவரும் முதுமைத்தாக்க நோய்களுக்கு உட்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். நெல்சன் மன்டேலா வீடு திரும்பியுள்ளார். சீனியர் புஷ் தொடர்ந்து கூஸ்ரன் வைத்திய சாலையில் சிகிச்சை பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன் மனநோய் நிபுணர்

# சிறுநீரகக் கற்கள்
# KIDNEY STONES

சிறுநீரகத்தில் கற்கள் (Kidney stones), அதாவது kidney இல் உண்டாகும் கற்களால் ஏற்படும் நோய் அம்சங்கள் பற்றியும், இந்த மாதிரி கற்கள் உண்டாவதை எப்படித் தடுப்பது என்பது பற்றியும் கவனிப்போம். எங்களது உடலில் இரண்டு மாங்காய் வடிவமான அல்லது Bean seed வடிவமான kidneys காணப்படுகின்றது.

சிறுநீரகங்களின் தொழில், எங்களுடைய உடலில் செமிக்கப்படாத அல்லது உடம்பிற்குத் தேவையில்லாத நீர்ப் பதார்த்தங்களை, சலம் (Urine) மூலமாக வெளியேற்றுவதே. Kidney யில் இருந்து Ureter என்று கூறப்படும் சிறிய குழாய் மூலமாக சலம் Urinary bladder ஐ அடைகின்றது. இந்த Urinary bladder இல் இருந்து Urethra என்று கூறப்படும் குழாய் மூலமாக சலம் உடம்பில் இருந்து வெளியேற்றப்படுகின்றது.

Kidney ஐ தாக்கும் வருத்தங்களில் சிறுநீரகக் கற்களே மிக மிக அதிகமாகக் காணப்படும் ஒரு வருத்தமாகும். ஒவ்வொரு வருடமும், அமெரிக்காவில் ஆயிரத்தில் ஒருவர் (அதாவது 1 in 1000) சிறுநீரகக் கற்கள் வருத்தத்தால் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படுகிறார். பெண்களை விட ஆண்களுக்கே இந்த சிறுநீரகக் கற்கள் அதிகமாகத் தாக்குகின்றது. பெண்கள் பிரசவ வேதனையால் கஷ்டப்படுபவர்கள் என்று கடவுள் அவர்களுக்கு மேலும் வேதனையை கொடுக்க விருப்பப்படவில்லைப் போலும்.

இந்தச் சிறுநீரகக் கற்களை இரசாயன மூலமாகப் பரிசோதித்துப் பார்த்தால், (அதாவது when chemically analysed), 70 விகிதமான கற்கள் கல்ஸியத்தினால் ஆக்கப்பட்டவை. இந்த கல்சியத்தால் உண்டான கற்களில், அதிகமாகக் காணப்படுவது கல்சியமும் ஒக்சலேற்றும் (Oxalate) சேர்ந்து உண்டாகும் Calcium Oxalate கற்களாகும்.

ஆகவே, எங்களுடைய உடம்பில் மேலதிகமான Calcium உம் Oxalate உம் காணப்பட்டால், அவை சிறுநீரகத்தை அடையும் பொழுது, Calcium oxalate ஐ கொண்ட கற்களாக சிறுநீரகத்தில் படிவதற்கு வாய்ப்புகள் உண்டு. என்ன காரணத்தால் எங்களுடைய உடலில் calcium அதிகமாகக் காணப்படலாம் என்பதை அறிந்தால், அதை தடுப்பதன் மூலம் நாங்கள் சிறுநீரகக் கற்கள் ஏற்படுவதை தடைசெய்யலாம்.

இதைப் பற்றி இந்த கட்டுரையில் கடைசிப் பகுதியில் ஆராய்வோம். 70% சிறுநீரகக் கற்கள் கல்சியத்தால் ஆக்கப்பட்டவை என்பதை அறிந்தோம். மிகுதி 30% இல், 10% கற்கள் Uric acid ஆல் ஆக்கப்பட்டவை.

இந்த மாதிரியான கற்களை Urate stones என்று கூறுவர். Gout என்று கூறப்படும் ஒருவிதமான Arthritis நோயில் எமது இரத்தத்தில் அதிகளவிலான Uric acid காணப்படுகின்றது. இந்த Uric acid, சிறுநீரகத்தில் Urate stones ஆக படிகின்றது. என்ன காரணத்தைக் கொண்டும் எமது இரத்தத்தில் Uric acid அதிகமாகக் காணப்படலாம். Gout என்று கூறப்படும் Arthritis வருவதற்கும், Urate stones சிறுநீரகத்தில் உண்டாவதற்கும் கூடிய வாய்ப்புகள் உண்டு. Lymphoma, Leuckamia போன்ற வருத்தங்களிலும் கூடியளவு Uric acid காணப்படுகின்றது.

எங்களுடைய சிறுநீரகத்தில் இருந்து வரும் Ureter, Urinary bladder, Urethra இவை எல்லாவற்றையும் சேர்த்து நாங்கள் Urinary Tract என்று கூறுகிறோம். அதாவது சலம் சிறுநீரகத்தில் இருந்து வெளியே வரும் பாதை என்று கூறலாம். இந்த Urinary tract இல் Bacteria போன்ற கிருமிகளால் அடிக்கடி infection வருமானால், எமது சிறுநீரகத்தில் கற்கள் படிவதற்கு வாய்ப்புகள் உண்டு.

இப்படிப்பட்ட infection ஆல் உண்டாகும் கற்கள் Triple phospate ஆல் ஆக்கப்பட்டவை. Triple என்ற சொல் 3 ஐ குறிக்கும். இந்த மூன்றும் என்னவென்றால் Calcium, Magnesium, Ammonia ஆகும். இந்த மூன்று Phosphate உம் சேர்ந்த கற்களை Triple phosphate என்று கூறுவர். இந்தச் சிறுநீரகக் கற்கள் என்னென்னவற்றைக் (Chemical Compositors) கொண்டிருக்கிறது என்பதை அறிவதால் நாங்கள் இந்த கற்கள் படிவதைத் தடுக்க முடிகிறது. ஆகவே சிறுநீரகக் கற்கள் எங்களைத் தாக்கினால், அதற்குச் சிகிச்சை செய்வது மாத்திரமன்றி, எங்களுடைய சிறுநீரகங்களில் உண்டான கற்கள் எப்படிப்பட்ட கல் என்பதை அறிவது, மிக முக்கியமானதொன்று என்பதை வாசகர்கள் மறக்கக்கூடாது.

அடுத்ததாக இந்த சிறுநீரகக் கற்களால் ஏற்படும் நோய் அம்சங்களைப் பற்றி அதாவது Symptoms பற்றி சில வார்த்தைகள். சிறுநீரகத்திற்கும் Ureterக்கு இடையில் இருக்கும் பகுதியை Pelvis அல்லது Renal Pelvis என்று கூறப்படும். பொதுவாக கற்கள் Renal Pelvis இல் இருந்தால், எங்களுக்கு ஒரு வருத்தமும் காணப்பட மாட்டாது. அப்படிப்பட்ட வேளையில், எங்களுடைய சலத்தை பரிசோதனைக் கூடத்தில் சோதித்துப் பார்த்தால், அதில் Red blood cells இதை Haemataria என்று கூறுவர். இதன் அர்த்தம் சலத்தில் இரத்தம் போயிருக்கின்றது என்பதாகும்.

அதிகமான இரத்தம் வெளியேறினால் எங்களால் பார்த்தவுடனேயே கூறக்கூடியதாக இருக்கும். இதை Frank Haematuria என்று கூறுவர். ஆனால் சிறிதளவு இரத்தம் சலத்தில்போயிருந்தால் அதை Microscope ஆல் பரிசோதிப்பதால் தான் கண்டு பிடிக்க முடியும். கற்கள் Renal Pelvis இல் இருந்து Ureter இற்குள் போனால் அதன் காரணத்தால் எமது உடம்பில் முதுகுப் புறத்தில் விலா எலும்புகளுக்கு கீழ் உள்ள இடத்தில் தாங்க முடியாத நோ உண்டாகின்றது. இதை Renal Colic அல்லது Flank pain என்று வர்ணிக்கப்படும்.

இந்த மாதிரியான நோவுடன், வாந்தி எடுக்க வேண்டும் போன்ற ஒரு உணர்வையோ (Nausea) அல்லது வாந்தி எடுத்தல், வயிறு பெருத்தல் (Abdominal distensias) போன்றவற்றை அனுபவிக்கலாம்.

(மார்ச் மாத இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# பழைய திரைப்படம்

இன்று ஒரு பழைய திரைப்படம் பார்த்தேன். இதே திரைப்படத்தை ஏறக்குறைய 50 வருடங்களுக்கு முன்னர் பார்த்திருக்கிறேன். அப்பொழுது நான் கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன். இயற்பியல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. பேராசிரியர் Distribution coefficient ratio என ஆரம்பித்தார். வார்த்தைகளை மனனம் செய்து எழுத்துக்கூட்ட பழகிக்கொண்டு அவற்றின் பொருளை அடுத்தநாள் அறிந்துகொள்ளலாம் எனத் தீர்மானித்தேன். இரண்டு பஸ் பிடித்து, மீதி தூரத்தை நடந்து கடந்து லிபர்ட்டி தியேட்டருக்கு போய்ச் சேர்ந்தேன். லிபர்ட்டி தியேட்டரில் ஆங்கிலப் படங்கள் மட்டுமே போடுவார்கள். கரி கிராண்டும் சோஃபியா லோரனும் நடித்து எல்லா பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்ட திரைப்படம். பெயர் House Boat, படகு வீடு. ஒரு காட்சியில் சோஃபியா லோரன் குனிந்து காலணிகளை ஒவ்வொன்றாகக் கழற்றி கதாநாயகன் மேல் வீசுவார். அதைக்கூட ஒரு பத்திரிகை விஸ்தாரமாக எழுதியிருந்தது.

இப்பொழுது படத்தை பார்த்தபோது ஒரு புதுப் படத்தை பார்த்தது போலவே உணர்ந்தேன். முந்திப் பார்த்த ஒரு காட்சிகூட ஞாபகத்தில் இல்லை. சோஃபியா லோரனும் கரி கிராண்டும் ஓர் இடத்தில் நடனமாடுவார்கள். இரண்டு நிமிடம் அந்தக் காட்சி காட்டப்படும். திரையை இருவருடைய முகங்களும் நிறைத்திருக்கும். வசனம் இல்லை. கண்களால் ஒருவரை ஒருவர் கவர்ந்து இழுக்கும் இடம். அதைக்கூட பார்த்த ஞாபகம் இல்லை. வழக்கமாக படங்களில் வரும் வசனங்கள் எனக்கு முக்கியம், காட்சி இரண்டாம் பட்சம்தான். வசனங்கள் வரும் இடங்களை உன்னிப்பாகக் கவனித்து நல்ல வசனங்களை மனப்பாடம் செய்துவிடுவேன். துக்கம் என்னவென்றால் ஒரு வசனம் கூட என் நினைவில் இப்போது இல்லை.

திரைப்படக் கதை சாதாரணமானதுதான். மதிப்பான வழக்கறிஞர் உத்தியோகத்தில் இருக்கும் கதாநாயகனுக்கு மனைவி இல்லை; மூன்று துடுக்கு பிள்ளைகள் மட்டுமே. சோஃபியா லாரன் அழகும் அறிவும் கூடிய இளம் பெண். விருந்துகளும் ஆடம்பரம் நிறைந்த வாழ்க்கையும் வாழ்ந்து அலுத்துப்போய் ஒரு சாதாரண வாழ்க்கைக்கு ஏங்குகிறாள். தன் பின்புலத்தை மறைத்து வேலை தேடிக்கொள்கிறாள். கதாநாயகன் வீட்டில் பிள்ளைகளைப் பார்க்கும் தாதிப் பணி. கதாநாயகனுக்கும் தாதிக்கும் இடையில் காதல் மலர்ந்து, வளர்ந்து திருமணத்தில் முடிவதுதான் கதை.

மனதில் நிற்கும் வசனங்கள் இருக்கின்றன. தொலைந்துபோன சிறுவனை மீட்டுக்கொண்டு சோஃபியா வருகிறாள். கதாநாயகன் பணம் கொடுக்கிறான். அவள் வேண்டாம் என்கிறாள். மறுபடியும் பணத்தை கூட்டிக் கொடுக்கிறான். அப்போதும் வேண்டாம் என்கிறாள். அவன் சொல்வான். 'இது என்ன? நன்றிக் கடன் தீர்க்கும் விலை அதிகமாகிக்கொண்டே போகிறது?' இன்னொரு இடத்தில் சோஃபியாவின் தந்தை சொல்வார்.

'உனக்கு ஒன்றுமே தெரியாது? நீ என்ன செய்வாய்?'
'ஏன், நான் காங்கிரஸ் வேட்பாளராக நிற்கலாம்தானே'
'ஏன் உயிர்கள் சாகின்றன?' குழந்தை கேட்கும்.
'மற்ற உயிர்கள் வாழ்வதற்குத்தான்.'

'ஒரு சாமானை விற்கும்போது உங்கள் முகம் பொருளை வாங்க வந்தவர் முகம்போல இருக்கவேண்டும். ஒரு சாமானை வாங்கும்போது முகம் விற்கவந்தவர் முகம் போல இருக்கவேண்டும்' இது என் அப்பாவின் அறிவுரை. இப்பொழுது நான் வாங்க வந்தேனா அல்லது விற்க வந்தேனா? முடிவு செய்யமுடியவில்லை. அதனால் முகத்தை எப்படி வைப்பது என்பதும் தீர்மானமாகவில்லை. ஆனால் என் உடலை சரியான விதமாகத்தான் தயார் செய்திருந்தேன். இடுப்பில் இறுக்கிக் கொண்டிருக்கும், அடியிலே பாவாடைபோல விரிந்த கால்சட்டை, முழங்கை மட்டும் மடித்துவிட்ட நீளக்கை சேர்ட், இடது கை மணிக்கட்டில் வெளிநாட்டு வைலர் கைக்கடிகாரம், காலில் ரூபா 19.99 பாட்டா சப்பாத்து. பல வருடங்களாக ஏங்கிய இந்த தருணத்தை அடைவதற்காக 19 வருடம், மூன்று மாதம் நிமிடம் நிமிடமாகக் காத்திருக்க வேண்டியிருந்தது. இதுவெல்லாம் இப்போது நினைவில் வருகிறது.

லிபர்ட்டி தியேட்டர் அந்தக் காலத்திலேயே குளிர்பதனம் செய்யப்பட்டது. திரைக்கு அருகாமையில் உள்ள ஆசனங்களின் விலை 50 சதம். அதற்குப் பின் ஒரு ரூபாய். அதற்கும் பின்னால் 1.50. அடுத்தது 2.50. ஆகக் கடைசிதான் முதல் வகுப்பு, 3.00 ரூபாய் டிக்கட். அந்த டிக்கட் பணத்தை ஒரு மாத காலமாக சேர்த்திருப்பேன் என்று நினைக்கிறேன். மூன்று ரூபாய் ஆசனம் மெத்தென்று இருக்கும் என்று சொல்லியிருந்தார்கள். நான் காலால் தடவித் தடவி உள்ளே நுழைந்தபோது என் ஆசனத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றவர்கள் எல்லாம் உட்கார்ந்திருந்தார்கள். பார்த்தால் என் இருக்கை நாற்காலி முதுகுடன் மடிந்துபோய்க் கிடந்தது. இரண்டு கையாலும் பிடித்து இழுத்தவுடன் ஆசனம் தயாரானது ஆனால் கைவிட்டதும் மறுபடியும் போய் ஒட்டிக்கொண்டது. ஒருவாறு கைகளால் இருக்கையை இழுத்து பிடித்து அதன் நுனியில் உட்கார்ந்தேன். மெத்தென்றுதான் இருந்தது.

என்னுடன் வாழ எனக்கு நல்லாய்ப் பிடிக்கும். என் பெயரை உச்சரித்து என்னை நானே மெச்சிக்கொண்டேன். பின்னால் தள்ளி உட்கார்ந்து உடலை சாய்த்ததும் படம் ஆரம்பமானது. படகு வீடு என்பதன் அர்த்தம் என்ன? படகுபோல் உள்ள வீடா அல்லது வீடு போல தோற்றமளிக்கும் படகா? படம் ஓடத் தொடங்கும் முன்போ ஓடிய பின்னரோ இதன் அர்த்தத்தை அறிய நான் முயலவில்லை. படம் முடிந்து எழுந்தவுடன் இருக்கையும் எழுந்து நின்றது ஞாபகம் இருக்கிறது. ஆனால் வசனங்கள் ஒன்றுமே என் நினைவில் இல்லை. காட்சியும் இல்லை. முழுப்படமும் மனதில் இருந்து மறைந்துவிட்டது.

என்னவென்று யோசித்துப் பார்க்கிறேன். அதுதான் நான் பலநாள் திட்டமிட்டு களவாக காதலியுடன் சேர்ந்து பார்த்த முதல் படம்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா? 28

எம்மைக் கடந்து செல்கிற எதுவும் ஐம்புலன்களில் ஏதோவொரு புலனைத் தொடுகிறது. காட்சி, ஓசை, தொடுகை, சுவை, மணம் யாவும் எமது ஐம்புலன்களின் வழியாக எமது மனதில் பதிவாகிறது. எமது மனம் என்று நாம் அழைப்பதெல்லாம் எம்மை வெளிப்படுத்திக் கொள்கிற சமூக சமய பண்பாட்டுச் சூழ்நிலையைப் பொறுத்ததாகவே இருக்கிறது.

எமது மனதில் பகுத்தறிவு ஒருபுறத்திலும், சேகரிக்கும் பகுதி ஒருபுறத்திலும், விழிப்புணர்வு ஒருபுறத்திலுமாக உள்ளன. நாம் சேகரித்த தகவல்களை மறுபயன்பாட்டிற்கு விடுகிற ஆற்றல் பகுத்தறிவுக்கு இருக்கிறது. ஒன்றையும் இன்னொன்றையும் பகுத்துப் பார்க்கிற அறிவால்தான் இவ்வுலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எமது பகுத்தறிவு எந்தளவிற்கு போக வேண்டும்? எந்த எல்லைக்குப் போகக் கூடாது என்று தெரிந்தால்தான் எமது வாழ்வு அழகானதாக இருக்கும்.
நாம் அளவுக்கு மீறி சிந்திக்கும்போது ஆனந்தம் குறைந்து போகிறது. சமூகத்தின் எல்லாக் குப்பைகளையும் சேகரிக்கும் பகுதியாக மனம் இருக்கக்கூடாது. சமூகம் எல்லா விடயங்களையும் எமக்குள் திணித்துவிட்டுச் சென்று கொண்டிருக்கும். இவை எல்லாவற்றையும் விழிப்புணர்வால் துடைத்துவிட்டால் எது உண்மை, எது உண்மையில்லை எனப் புரிந்து கொள்கிறோம். பகுத்தறிவு அல்லது தர்க்க அறிவு மிகவும் கூர்மையாவது இந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

"அன்றாட வாழ்வில் நம் மனதில் வந்து போகும் விடயங்களின் நுண்ணிய வடிவமே அறிவியல்" என்று விஞ்ஞானி ஐன்ஸ்டீன் கூறியுள்ளதினை நினைவு கூர வேண்டும். "மனம் என்பது ஒரு பரசூட் போல் அதை நாம் விரித்தால்தான் இயங்குகிறது" என்கிறார் தோமஸ் டேவர். "சொர்க்கம் உள்ளே இருக்கிறது நாம்தான் வெளியே இருக்கிறோம்" என்பது யேசுவின் கூற்று. "நம் மனம் என்பது வளமான விளைநிலத்தைப் போன்றது. அதிலுள்ள நல்ல எண்ணங்களையே உழுது பயிரிடல் வேண்டும்" என்கிறார் டாக்டர் மு.வரதராசனார். உலகிலுள்ள எல்லா பெரிய தத்துவமேதைகளும் ஒத்துக்கூறிய விடயம் மனமும் அதன் பலமுமாகும்.

எங்கோ கண்காணாத ஒரு மலைத்தொடரின் ஒரு மூலையில் பனி உருகியோ அல்லது மழையின் காரணமாக ஒரு துளி நீர் உருவாகிறது. இதுவே அருவியாகி, சிறுநதியாகி, பெரிய ஆறாகி மக்களுக்கு உதவுகிறது. நாம் ஒவ்வொருவரும் மழைத்துளி போன்றவர்களேதான். நாம் எமது மாற்றத்தினை மற்றவர்களுக்கும் விளக்கும்போது புது உறவு பிறக்கிறது. உறவுகள் பலவாகி அன்பும் அமைதியும் நிறைந்த புது உலகமாகிறது. "எம் மனத்துள் இருக்கும் போட்டி, பொறாமை, பதவியாசை, புகழ்வெறி, பணத்திமிர், கோபம், சந்தேகம், சுயநலம், ஒப்பீடு, முரட்டுசுபாவம் எல்லாவற்றையும் விரட்டியடித்து மீண்டும் எமது உள்ளத்துள் நுழைய அனுமதிக்க மாட்டோம்" என உறுதிபூண்டால் அதுவே போதும்.
மனம்போல் வாழ்வு – அதுவே உண்மை.
மீண்டும் சந்திப்போம்.●

## தனித்தமிழ் பெயர்களுக்கு 1500 வெள்ளிகள் பரிசு

கனடாவில் இயங்கும் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் 2007-2012ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் தனித்தமிழ் பெயர்களைக் கொண்டவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை இவ்வருடமும் நடைமுறைப்படுத்துகின்றது. இதற்கான விண்ணப்பங்களை பிள்ளைகளின் பெற்றோர் மட்டும் அனுப்பமுடியும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தெரிவானால், தகுதியுடையோர் குடவோலை மூலம் தெரிவாவர். விண்ணப்பமுடிவு திகதி 2013 ஜனவரி 10ஆம் திகதி. இந்த மாதம் 14ல் கனடா கந்தசாமி மண்டபத்தில் நடைபெறும் தமிழ்ப்புத்தாண்டு, தைப்பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்தநாள் ஆகியவை ஒன்றிணைந்த விழாவில் பரிசுகள் வழங்கப்படுமெனக் கழகம் அறிவித்துள்ளது. மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் படைப்பாளிகள் கழகத்துடன் 416 281 1165 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## வரி செலுத்துவதைத் தவிர்க்க 55 வீதமானோர் விருப்பம்

அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவிலிருந்து விடுபட, வரி செலுத்துவ-திலிருந்து தங்களைத் தவிர்த்துக் கொள்ளும் வழிமுறைகளைப் பலரும் நாடி வருகின்றனர். முக்கியமாக விற்பனை வரி செலுத்துவதிலிருந்து தவிர்ப்பதற்காக பணம் செலுத்தி, பற்றுச்சீட்டு பெறாத வகையில் பொருட்களைக் கொள்முதல் செய்ய விரும்புவதாக ஒரு கருத்துக் கணிப்பில் ஐம்பது சதவீதமானவர்களும் தெரிவித்து உள்ளனர். வரி ஏமாற்று தண்டனைக்குரிய குற்றம் இதனை 30 வீதமானவர்கள் மட்டுமே தெரிந்திருப்பதையும் கருத்துக் கணிப்பு தெரியத்தந்துள்ளது.

## சொத்து வரி அதிகரிப்பு

2013ஆம் ஆண்டுக்கான சொத்துவரியை ரொறன்ரோ நகரசபை இரண்டு வீதத்தினால் அதிகரித்துள்ளது. பிராம்டன் நகரசபை இந்த ஆண்டுக்கான சொத்துவரியை 4.9 வீதத்தினால் அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாஞ்சில் நாடனுக்கு இயல் விருது



கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் 2012-ம் ஆண்டுக்கான இயல் விருது, மூத்த தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரும், நாஞ்சில் நாட்டு வட்டார மொழியைத் தமிழ் இலக்கிய வாசகர்களிடையே பிரபலப்படுத்தியவருமான நாஞ்சில் நாடனுக்கு வழங்கப்படுகிறது. இந்த வாழ்நாள் சாதனையாளர் விருது, கேடயமும் 2500 கனடிய டாலர்கள் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லட்சுமி ஹோம்ஸ்ரோம், அம்பை, ஐராவதம் மகாதேவன், கோவை ஞானி, எஸ்.பொன்னுத்துரை, எஸ்.ராமகிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து, இவ்வருடம் நாஞ்சில் நாடன் அவர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

ஜி.சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட நாஞ்சில் நாடன், பம்பாய் தமிழ் சங்கம் வெளியிட்டு வந்த 'ஏடு' இதழில் தன் இலக்கியப்பணியைத் தொடங்கினார். 1975-ம் ஆண்டு வெளிவந்த 'விரதம்' சிறுகதையில் தொடங்கி, முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவருகிறார். இருபத்தைந்து வயதிலேயே வேலை நிமித்தமாக சொந்த ஊரை விட்டுச் சென்றிருந்தாலும் இவரது படைப்புகளில் நாஞ்சில் நாட்டு மக்களும், மொழியுமே பிரதானமாக வெளிப்படுகின்றன. இவர் சங்க இலக்கியங்களிலும் கம்பராமாயணத்திலும் நல்ல பயிற்சியும் ஈடுபாடும் கொண்டவர். இதுவரை 6 நாவல்கள், 9 சிறுகதைத் தொகுப்புகள், 6 கட்டுரைத் தொகுப்புகள், 2 கவிதைத் தொகுப்புகள் என வெளியிட்டுள்ளார்.

சிறுகதைகளுக்கான இலக்கியச் சிந்தனை விருது (1975, 1977, 1977), தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான விருது (1993), கண்ணதாசன் விருது (2009), கலைமாமணி விருது (2009) எனப் பல்வேறு விருதுகளைப் பெற்ற இவர், 'சூடிய பூ சூடற்க' சிறுகதைத் தொகுப்புக்காக 2010-ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதையும் பெற்றுள்ளார். இவரது நாவல்களும், சிறுகதைகளும் தமிழ்நாடு, கேரளா மற்றும் டெல்லியிலுள்ள பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ளன. இதுவரை 14 பேர் இவரது படைப்புகளை முன்வைத்து முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவரது 'தலைகீழ் விகிதங்கள்', 'எட்டுத் திக்கும் மதயானை' நாவல்கள் திரைப்படங்களாக்கப்பட்டுள்ளன. தவிர, இயக்குநர் பாலாவின் 'பரதேசி' திரைப்படத்திற்கு வசனமும் எழுதியுள்ளார். இயல் விருது ஜூன் மாதம் ரொறன்ரோவில் வழங்கப்படும்.●

# நீட்சியறியா நெடும் பயணம்

## *கணியன்*

தமிழர்தகவல்
இடர் நிறைந்த பாதையில் இருபத்துஇரண்டு ஆண்டுகள்
தங்குதடையற்ற பயணம்.
பனிக்கும் டொலருக்கும் நடுவே இருப்பைப் பணயம் வைக்கும்
அன்றாட வாழ்க்கையில்,
சிதறாத இலக்கோடு, சீராய் எழுதிச் செல்வது
சாத்தியப்பட்டிருக்கின்றது என்பதன் சான்று தமிழர் தகவல்.
வலியோடு எழுந்த வாழ்வுக்கு இடையே வலிமையோடு பிறந்த இதழ் இது.

பனைகள் வளர்ந்தெழும் மண்ணில் இருந்து வீசியெறியப்பட்ட விதைகளில் ஒன்றாய்
கனடா மண்ணில் பதியம் கொண்டபோது,
பனிப்புலத்தில் பனை முளைக்குமா?
புதுநிலத்தில் உயிர்தாங்குமா?
இந்த வினாக்கள் எழாமல் இல்லை.
பனிப்பாறைகளை உடைத்து ஊடுருவி வேர்விட்டு
தனித்துவ இயல்பிழக்காது துளிர்விட்டு,
'பைன்' மரப் பொலிவோடு எம் தமிழாய் எழுந்திருக்கின்றது
தமிழர் தகவல்.

சுயம் இழந்து ஒப்புக்கும் எழுதியதும் இல்லை
பிறர் இடும் உப்புக்கும் தன்நிலை வழுவியதில்லை.
இயல்பாய்க் கொண்ட இதழியல் தரத்தில் இருந்து
பேரங்களுக்காகப் பிசகியதும் இல்லை.

பனிவயலில் பதியம் கொண்ட இன நாற்றுகளின்
ஒவ்வொரு சுவட்டையும் அளந்தறிந்து ஆவணமாக்கிய சுவடி இது.
1983இல் தொடங்கிய அகதி வாழ்வுக்கு முன்பாகவே நீண்டிருந்தது
கனடாத் தமிழர் வரலாறு.
தொடக்கநாள் தொட்டு இன்றுவரை
இடையறா இன்னல்கள் வழியே,
தடை கடந்து தலை நிமிர்ந்த வரலாறு தமிழருக்கு உரியது.
அகதியாய் வந்து அசுர வளர்ச்சியுற்ற இனத்தவர் நாம் என்பது
கனடாவின் வரலாற்றுக் குறிப்பு.
இந்த வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும்
தமிழர் சுமந்த வலியையும் வழிந்த வியர்வையையும்
காலந்தோறும் கவனமாய்க் கணக்கெடுத்து வந்த இதழ்
தமிழர் தகவல்.

ஆண்டுதோறும் அகமும் முகமும் மாறிச்செல்லும் வாழ்வு
இந்த மண்ணுக்குரியது.
நிறம் மாறிய அகங்களின்
உருமாறிய முகங்களின்
உண்மை வடிவங்களை தகவலின் பக்கங்களில் என்றும் காணலாம்.
தமிழர் தகவல் பூக்களாலும் பூசிக்கப்பட்டிருக்கின்றது
கற்களாலும் காயப்படுத்தப்பட்டிருக்கின்றது.
பூக்களுக்காகப் புன்னகைப்பதுவும் இல்லை
கற்களுக்காக விழி கசிவதுவும் இல்லை.
செதுக்குதல், சிதைத்தல் கூரான எழுத்தில் இரண்டும் இயல்பாய் நிகழும்.
விளைவுகளை முன்னிறுத்தி இயல்பிழக்காத இதழ்
தமிழர் தகவல்!
இருபத்துஇரண்டு படிகளில் பயணித்த வலிமை பல பத்து ஆண்டுகளுக்கு
உரமூட்டியிருக்கின்றது.

இது நீட்சியறியா நெடும் பயணம்.
தகவலில் தொடரும் பணயத்தில் எங்கள் எதிர்காலப் பரம்பரையும் பதியப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# முதலாவது தமிழ்த் தூயர்

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் முதலாவது தடவையாக தூயராக அங்கீகாரம் பெற்றுள்ளார் தமிழர் ஒருவர். இதன் மூலம் அவர் பெயரில் ஆலயங்கள் எதிர்காலத்தை எதிர்கொள்ளும். அவர் மீதான தோத்திரப் பாமாலைகள் நற்பேறு பெறும். அதிகாரபூர்வமாக மறைசாட்சியாக (martyr), முத்திபேறு பெற்றவராக (*Blessed*), அருளாளராக, புனிதராக, தூயராக அறிவிக்கப்பட்டுள்ளவரின் பெயர் தேவசகாயம்.

அப்போஸ்தலர் அல்லது திருத்தூதர் அல்லது வணக்கத்துக்குரியவர் அல்லது அர்ச்சிக்கப்பட்டவர் என்ற அடைமொழியும் இனி அவரது பெயரின் முன்பாக உபயோகமுறும் என்பதும் ஒவ்வொரு மனசும் உணர முடியும் ஒரு ரகசியம்.

2012 ம் ஆண்டு மார்கழி மாதம் 2 ம் திகதி கத்தோலிக்க திருச்சபையின் பேராய ஆவணத்தில் (Congregation for the Causes of Saints) கையொப்பமிட்டு இதனை உத்தியோகபூர்வமாக பிரகடனம் செய்தார் பாப்பரசர் 16 வது பெனடிக். 1993ம் ஆண்டு தேவசகாயத்திற்கு புனிதர் பட்டம் வழங்கப்பட வேண்டும் என்ற விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும் இதன் முதற் கட்டமாக 2004ம் ஆண்டு பாப்பரசரால் இறை ஊழியர் என்ற பட்டம் வழங்கப்பட்டதும் நினைவில் நிற்பவை.

சில வருடங்களுக்கு முன்பு அன்னை திரேஸாவிற்கு இதேவித அங்கீகாரம் வழங்கப்பட்ட பொழுது ஆண்டவன் பக்கத்திலே இருப்பது போலோர் உணர்வு தோன்றியதாக அகமகிழ்ந்தது கத்தோலிக்க உலகம். தூயரான முதலாவது இந்தியர் புனித. அல்போன்ஸா ஆவர். இது வரையில் தூயரானோரின் எண்ணிக்கை 810 என்றொரு கணிப்பும் உண்டு.

வண.தேவசகாயம் தென் இந்தியாவில் குமரி மாவட்டத்தில் 1712 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ம் திகதி இந்துவாகப் பிறந்தார். அவரது இயற்பெயர் நீலகண்டபிள்ளை. கத்தோலிக்க மதம் அவரை இணைத்துத் திருமுழுக்காற்றி இட்ட பெயர் லாசரஸ் (Lazaraus). கடவுளின் கருணை என்ற கருத்துள்ள லாசரஸ் என்ற பெயர் தேவசகாயம் என தமிழ் வடிவம் பெற்றது. பார்கவி என்ற அவரது மனைவியின் பெயர் ஞானப்பூ ஆகியது.

வர்மக்கலை வில்வித்தை போர்ப்பயிற்சி ஆகியவற்றில் நிபுணராகவும் தமிழ் மலையாளம் சமஸ்கிருதம் ஆங்கிலம் டச்சு போன்ற மொழிகளில் வல்லுனராகவும் திகழ்ந்தார்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மன்னர் மார்த்தாண்ட வர்மனின் போர்ப்படையில் பணிபுரிந்தார். 1741ல் பெனடிக்டஸ் டீ லெனோய் (Benedictus De Lennoy) என்றவர் தலைமை தாங்கி வந்த ஒல்லாந்துப் படை வீழ்ச்சியுறுவதற்கு மாட்டு வண்டிகளில் பனை மரங்களைக் கட்டி பீரங்கிப் பீதி ஏற்படுத்தியிருந்தது காரணமாகியது.

மார்த்தாண்ட வர்மன் படையில் டீ லெனோய் இணைந்து தளபதியாகி நீலகண்டபிள்ளையின் நெருங்கிய நண்பரானதன் விளைவு நீலகண்டபிள்ளை கிறிஸ்துவராக மதம் மாறினார். பைபிளின் போதனைகளை விசுவாசத்துடன் ஏற்றார். போதித்தார். மதம் மாற்றினார்.

மார்த்தாண்டன் அரசு தேவசகாயத்தை மனம் மாறவும் மீண்டும் மதம் மாறவும் எச்சரித்தது. நச்சரித்தது. தேவசகாயம் அதற்கு சகாயமாக இல்லை. எனவே கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். மரத்தில் கட்டி அடித்தனர். நெருப்பில் தள்ளிக் கருக்கினர். சுண்ணாம்பு சூளையில் எறிந்தனர். பாம்புகளுடன் நெளிய வைத்தனர். குரங்குகளுடன் கூண்டில் அடைத்தனர். உடலில் கரும் புள்ளி செம் புள்ளி குத்தி கழுத்தில் எருக்கம் பூ மாலை அணிவித்து கைகளை பின்புறமாகக் கட்டி எருமை மாட்டின் மீது அமர்த்தி ஊர் ஊராக ஊரவைத்தனர். சிறையில் அடைத்து குரூரப்படுத்தினர். 1752 ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி காற்றாடி மலை என்ற இடத்தில் மன்னரின் ஆணையால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் உயிர் நீத்த இடம் தேவசகாயம் மவுண்ட் எனவும் மணி அடிச்சான் பாறை எனவும் இன்றும் அழைக்கப்படுகின்றது. நிறைவேறாத வேண்டுதலோடு வருபவர்கள் நிறைகின்றனர்.

லாசரஸ் தேவசகாயம் ஆனது போல பிறமொழிப்பெயர்களுக்கு தமிழ் வடிவம் கொடுக்கும் வழக்கம் தமிழ் கிராமங்களில் உண்டு. இதன்படி - பீட்டர் ராயப்பர் ஆனார். ஜேம்ஸ் யாகப்பர் ஆனார். அன்ரூ அந்திரேயர் ஆனார். தேமஸ் தோமையர் ஆனார். ஸ்ரீபன் முடியப்பர் ஆனார். ஜோன் அருளப்பர் ஆனார். போல் சின்னப்பர் ஆனார். பெனடிக் ஆசீர்வாதப்பர் ஆனார். பயஸ் பத்திநாதர் ஆனார்.

166 மில்லியன் மக்கள் ரோமன் கத்தோலிக சமயத்தைப் பின்பற்றுகின்றனர். ஜேசு நாதரின் பிரதம சீடரான பேதுருவினால் உருவாகியதே கத்தோலிக்க திருச்சபை ஆகும். பாப்பரசரை தலைவராகக் கருதி திருத்தந்தை என்கின்றனர். பேதுருவின் வழிவருபவராக திருத்தந்தை தெரிவு பெறுவர். தற்போதைய திருத்தந்தை 16 வது பெனடிக் (ஆசீர்வாதப்பர்) 265 வது பாப்பரசராவர்.

துயர் போக்கும் தூயராக தமிழர் ஒருவர் திருநிலைபடுத்தப்பட்டுள்ள அருளுடன் ஆரம்பிக்கின்றது இந்த ஆண்டு!

வாழ்த்துக்கள்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியத் திட்டத்தில் ஜூனில் மாற்றம் வரலாம்!

Canada Pension Plan (CPP) எனப்படும் கனடிய ஓய்வூதியத் திட்டத்தில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் மாற்றம் வரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. கனடிய மத்திய நிதி அமைச்சர் தலைமையில் மாகாண நிதி அமைச்சர்கள் கடந்த மாதம் இது தொடர்பாக நடத்திய மகாநாட்டில் எந்த முடிவும் எடுக்கப்படாததால் ஜூன் மாதத்தில் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு ஒத்திவைக்கப்பட்டது. புதிய மாற்றத்தின் கீழ் வேலைபுரிபவர்கள் மாதாந்தம் செலுத்தவிருக்கும் கொடுப்பனவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# ரொறன்ரோவில் 'கொண்டோ' அதிகரிப்பினால் அவசரசிகிச்சைப் பிரிவு சந்திக்கும் நெருக்கடி

ரொறன்ரோ நகரில் 'கொண்டோ' உயர்மாடி மனைகள் அதிகரித்து வருவதால், இங்குள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் பலத்த நெருக்கடியைச் சந்தித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. "ஒரு தடவை எவராவது இந்தப் பக்கம் வந்து எட்டிப் பார்த்தால் நிலைமையைப் புரியலாம்" என்று அவசர சிகிச்சைப் பிரிவின் தலைமை அதிகாரியான டாக்டர் அனில் சொப்ரா தெரிவித்துள்ளார்.

வடஅமெரிக்காவிலேயே கூடியளவு கொண்டோக்கள் ரொறன்ரோவிலேயே உள்ளன. இதற்கு ஏற்றதாக அவசர சிகிச்சைப் பிரிவுகள் விஸ்தரிக்கப்படவில்லை. ரொறன்ரோவின் இரண்டு வைத்தியசாலைகளில் மட்டும் ஒவ்வொரு வருடமும் ஒரு லட்சம் பேர் அனுமதிக்கப்படுகின்றனர். வருடாந்த நோயாளர் தொகை சுமார் பத்து வீதமாக அதிகரித்து வருகின்றது. 2006க்கும் 2011ஆம் ஆண்டுக்குமிடையிலான காலத்தில் ரொறன்ரோவின் சனத்தொகை 4.5 வீதத்தால் (112,000 ஆட்கள் வரை) அதிகரித்துள்ளது. சென் மைக்கல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவே அதிக நெருக்கடியைச் சந்திக்கின்றது.



பொன்னையா விவேகானந்தன்

# வெயிலாடு முசுவின் குருளை

32

மாந்தஇனம் தோன்றிய காலந்தொட்டு, உலகுள்ளவரை தொடரும் உணர்வுகளில் முதன்மையானது காதல். மொழிசார்ந்த ஒரு படைப்பாளன் உணர்வளவில் உச்சம் தொடுகின்ற களமும் இதுவே.

இலக்கியம் கடந்து வந்த காலவெளி அனைத்திலும் தமிழர் காதல் ஆழமாகவும் அழகாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆயினும் கழககாலப் புலவனின் அன்புசார் அனுபவங்கள் இன்றும் விழிகளை வியக்க வைக்கின்றன.

காதலில் கூடி மகிழ்கின்ற இன்பத்தைப் பேசுவதைவிட, பிரிவுற்று வாடுகின்ற துயரத்தையே இப்புலவோர் பெரிதும் பதிவுசெய்துள்ளனர்.

இது ஒரு குறுந்தொகையின் குறிஞ்சிக் காட்சி.

வழக்கம்போல் காரிருள் வேளையில் கூடிக்குலாவி விடிவெள்ளிக்கு முன்பாக விலகிப்போகின்ற குறிஞ்சி நிலக் காதற் தலைவனின் இலக்கணங்களுக்கு இவனும் விதிவிலக்கல்ல. அவனுக்கு வேறு என்ன பணியோ? கொஞ்ச நாட்களாகக் காணவில்லை. அவளுக்கோ அது உயிர்நிலை. பிரிவுத்துயர் உயிர்தேடிச் சுட்டது.

காட்டிலே வாழுகின்ற மயில் கூட்டிலோ பொந்திலோ வாழ்வதில்லை. மரங்களிலும் சிறு பற்றைகளுக்குள்ளும் வாழுந்து முட்டையிடும். அக்காடுகளிலே முசு என்கின்ற ஒருவகைக் குரங்கினம் உண்டு. சுட்டெரிக்கின்ற வெயிலிலே நிற்க முடியாமல் ஆடிக்கொண்டிருந்த ஒரு குரங்குக்குட்டி மயில் இட்ட முட்டையினை உருட்டி விளையாடியது. இத்தகைய காட்சிகள் மிக்க நாட்டைச் சேர்ந்த தலைவனது நட்பு மிக நல்லதாகவிருந்தது. அது போய்விட்டது. நீரோடு கூடிய என் மையுண்ட கண்களோடு நான் ஓரிடத்தில் கூடியிருக்க, என்னைப் பிரிந்திருத்தலை நினையாது வாழுகின்றாரே, அவருக்கு என் துயரத்தை உரைப்பது யார்?

கான மஞ்சை அறையின் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன் வாழி தோழி உண்கண்
நீரொ டொங்குதட தணப்ப
உள்ளாது அகறல் வல்லுவோர்க்கே.

குறுந்தொகை 38

தலைவன் வரும் காலம் நீடித்துச் செல்கின்றதே என்பதுதான் தலையாய வேதனை. தோழியிடம் அதைத்தான் இவள் புலப்படுத்துகின்றாள். என் துயரை நீ சென்று அவனுக்குத் தெரிவிப்பாயா என்ற வேண்டுதலும் இந்தச் செய்யுளில் உள்ளது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன்னுமொரு பெருஞ் செய்தியை இவள் புலப்படுத்துகின்றாள்.

மயில் நிலை பரிதாபத்துக்குரியது. கூடுகட்டி வாழத்தெரியாத பறவை. பற்றைகளுக்குக் கீழேயோ அல்லது பாறைகளுக்கு அடியிலேயோதான் அது முட்டையிடும். அதுவே அதன் இயல்பு. வெயிலில் ஓரிடத்தில் நிற்க முடியாத குரங்குக்குட்டி உருட்டி விளையாட முட்டைதானா கிடைத்தது? முட்டையை இட்ட மயிலின் வேதனையும், எளிதாய் உடையவல்ல முட்டையின் மென்மையும் இந்தக் குரங்குக்குட்டிக்குப் புரியவில்லையே.

மயிலாக இவளையும், குரங்கின் குட்டியாகத் தலைவனையும், உருட்டுதலை தலைவனது ஒழுக்கமாகவும் நோக்கியுணர்ந்தால் தகைசால் புலவன் கபிலரின் படைப்பு நுட்பத்தை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

நுகரும் போதெல்லாம் இளமை குன்றா இன்பம் தருவன இலக்கியங்களே.●

அன்பான தமிழர் தகவல் வாசகர்களே!
இந்த ஆக்கங்களுக்குத் தொடர்ச்சியாக நீங்கள் வழங்கி வருகின்ற ஆதரவுக்கு நன்றி!
இந்த இதழோடு நாழிகைச் சுவடி என்னும் தொடர் நிறைவுக்கு வருகின்றது.
மார்ச் மாதம் முதல் மற்றுமொரு புதிய தொடரினூடாக நாம் இணைந்து கொள்வோம்.
பொன்னையா விவேகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாவா? சபீனாவா?

இந்தியப் பிரதமராகவிருந்த ராஜீவ் காந்தி மரணமாகி இருபத்தியோரு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், புதுப் பிரச்சனையொன்று முளைவிட்டுள்ளது.

ராஜீவின் மனைவி இத்தாலியப் பெண் சோனியாவா? அல்லது ஹைதராபாத் பெண் சபீனா பிர்டுஸ் என்பவரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதற்கான காரணம், ராஜீவின் மனைவி தாமே என்று கூறி, தமிழகத்தின் காஞ்சிபுரத்திலுள்ள பதிவாளர் அலுவலகத்தில் அவரின் மரணச் சான்றிதழொன்றுக்கு சபீனா விண்ணப்பம் செய்து அதனைப் பெற்றுள்ளதே. இதனால் நேரு குடும்பம் தலையைப் பிய்த்துக் கொண்டிருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்து எழுந்துள்ள கேள்வி, 'ராஜீவ் - சபீனா' இணைப்பை நிரூபிப்பதற்கு, சபீனாவுக்குப் பிள்ளைகள் உண்டா என்பதே! சோனியாவும் ராகுலும் இதனை எவ்வாறு பார்க்கிறார்கள்?

## 2012 டிசம்பர் 12 (12/12/12) வாராது வந்த பொன்னாள்

கடந்த வருடக் கடைசி மாதம் 12ஆம் திகதியை உலகம் முழுவதும் ஒரு பொன்னாளாகக் கொண்டாடியது. காரணம் திகதி, மாதம் வருடம் என்பன ஒரே சீர்வரிசையில் 12/12/12 என்று வந்திருந்தன.

ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு தடவை மட்டும் இப்படியாக அமையுமென்பதே இந்த ஆரவாரத்துக்கான காரணம். இனி 3012ஆம் ஆண்டில் இவ்வாறு வரும்போது, இப்போதுள்ள எவரும் இவ்வுலகில் இருக்க மாட்டார்கள்.

12/12/12 தினத்தில் பல நகரங்களில் முதலாவதாகப் பிறந்த குழந்தைகளுக்கு தடல்புடலான வரவேற்பு. ஆபிரிக்க நாடொன்றில் அன்று நூறாவது பிறந்த நாள் கண்ட ஒருவர் 121212 சென்ரி மீட்டர் நீளமான கேக் வெட்டி அந்த நாளைப் பெருவிழாவாகக் கொண்டாடி 'கின்னஸ்' சாதனைப் பதிவுக்கு அனுப்பியுள்ளார்.

ரொறன்ரோ நகரசபை பதிவாளர் அலுவலகத்தில் அன்றைய தினம் நாற்பதுக்கும் அதிகமான தம்பதிகள் பதிவுத் திருமணம் புரிந்து சாதனை படைத்தனர். இவர்களுள் சிலர் தமது வளர்ந்த பிள்ளைகள் சகிதம் வந்து தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து அவர்களை மகிழ்வித்தனர். 12/12/12க்கு வாழ்த்துகள்!

## பிறப்பில் அதிர்ஷ்டம் பெற்ற ஒரு பாம்பும் ஒரு குரங்கும்

இலங்கையில் ஒரு பாம்பும் கனடாவில் ஒரு குட்டிக் குரங்கும் பிறப்பால் அதிர்ஷ்டம் பெற்றவை. கடந்த மாதம் பல செய்திகளில் இந்தப் பாம்பும் குரங்கும் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இலங்கையில் நடனமாது ஒருவர் எவருக்கும் தெரியாமல் வளர்த்து வந்த விஷப்பாம்பை பொலிசரர் பறிமுதல் செய்ய, அவர் நீதிமன்றம் சென்று அதனை மீளப்பெற்றுள்ளார்.

நீதிமன்றுக்குள் வைத்தே தமது பாம்பைத் தடவி அணைத்து முத்தமிட்டு படப்பிடிப்பாளர்களுக்கு விருந்தளித்தார். ரொறன்ரோவில் 'ஐகியா' வர்த்தக நிறுவன வாகன தரிப்பிடத்தில் சுதந்திரமாக உலாவித் திரிந்த குட்டிக் குரங்கை காவற்றுறையினர் பிடித்துச் சென்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

நீதிமன்றம் அதன் உரிமையாளரான அம்மணிக்கு 200 டாலர் அபராதம் விதிக்குமென எதிர்பார்க்க, "எனது மகனை என்னிடம் தாருங்கள்" என்று நீதிமன்றத்தில் குரங்கை மீட்க பராமரிப்புத் தாக்கல் செய்துள்ளார் செவிலித் தாயார்!

## 71 ஆண்டுகளுக்குப் பின்னர் பறந்து சென்ற நத்தார் அட்டை

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜேர்மனிய படையினர் தங்கள் உறவினர்களுக்கு அனுப்பிய நத்தார் வாழ்த்து மடல்கள் 71 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் உரியவர்கள் சிலரைச் சென்றடைந்துள்ளன. ஜெர்சித் தீவில் இவைகளை நாஜிப் படை வீரர்களுக்கு எதிராக இளைஞர் கூட்டம் திருடி வைத்திருந்தது.

மஞ்சள் நிறத்தில் பழுப்பேறிய இந்த அட்டைகளைப் பெற்ற சிலர் தங்கள் பாட்டன்மாரை நினைத்து உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் விட்டனராம். ஆனால், சிலர் இதனை வாங்க மறுத்தனராம். தங்கள் பாட்டன்மார் நாஜி ஆதரவாளராக இருந்தது தெரிந்துவிடுமென்ற அச்சமே காரணமாம்!

## அன்பழகனின் மலர்மாலை அடுத்த தலைக்கும்...!

பேராசிரியர் அன்பழகனின் 91வது பிறந்த தினம் கடந்த மாதம் வந்தது. வழக்கம்போல அண்ணாநகர் வீட்டுக்குச் சென்று கலைஞர் அன்பழகனை வாழ்த்தினார்.

இம்முறை தம்முடன் ஸ்டாலினையும் அழைத்துச் சென்றார். அன்பழகன் 'ரெடி'யாக வைத்திருந்த இரண்டு மலர்மாலைகளை எடுத்து இருவருக்கும் சூட்டி மகிழ்ந்தார்.

'ஸ்டாலின் தலைமையில் நான் பணிபுரியத் தயார்' என்பதை சூசகமாக அன்பழகன் காட்டிவிட்டதாக் குஞ்சுத் தொண்டர்கள் குதூகலிக்கின்றனர். மரியாதைக்காக தமக்குப் போட்ட மாலையைக் கழற்றி அன்பழகனுக்குச் சூட்டி மகிழ்ந்தார் ஸ்டாலின்.

இந்த நாடகத்தை அவதானித்துக் கொண்டிருக்கும் அண்ணன் அழகிரி கொதித்துக் குமுறுகிறார் என்கிறார்கள் மதுரை வீரர்கள்.

## சின்னத்திரை மோகத்தால் விவாகரத்துகள் அதிகம்

தமிழக தொலைக்காட்சிகள் (சின்னத்திரை) குடும்பங்களில் செலுத்தும் ஆதிக்கத்துக்கு ஒரு உதாரணம் இது. சென்னையிலுள்ள நீதிமன்றமொன்றில் கடந்தாண்டு தாக்கலான விவாகரத்து வழக்குகளில் ஆயிரத்துக்கும் அதிகமானவைக்கு சின்னத்திரை நாடகங்களே காரணமாம். இதில் 896 வழக்குகளில் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது..

அந்த நாடகங்களில் மூழ்கிக் கிடக்கும் பெண்கள், நாடகங்களின் கற்பனை வாழ்க்கையைப் பின்பற்றியதால் ஏற்பட்ட சீரழிவின் விளைவு என்று சமூக ஆய்வாளர்களும் நீதிபதிகளும் கருத்துக் கூறியுள்ளனர்.

(ஆதாரம்: மாலைமுரசு)

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# பிரசர் (உயர் இரத்த அழுத்தம்) பற்றி அறிய வேண்டியவை

"எனக்கு தலைச்சுற்று இல்லை, தலையிடி இல்லை, களைப்போ சோர்வோ இல்லை, ஆனால் டாக்டர் பிரஸர் என்று சொல்கிறாரே" என நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

ஆனால் அதுதான் உண்மை. பிரஸர் என்பது அறிகுறிகள் அற்ற நோய். எனவேதான் பெருந்தொகையான மக்கள் தங்களுக்குப் பிரஸர் (உயர் இரத்த அழுத்தம்) இருப்பதை அறியாமலே இருக்கிறார்கள். சிலர் அறிவதற்கு முன்னரே அதன் பாதிப்புகளால் இறந்து போகவும் கூடும்.

கடுமையான பாதிப்புகள்
எந்தவித வெளிப்படையான அறிகுறிகள் இல்லாவிட்டாலும் இந்நோய் ஆபத்தானது. ஏனெனில் பிரஸர் நீண்ட காலம் இருந்தால் அவருடைய உறுப்புகள் காலகதியில் பாதிக்கப்படும்.

- பிரஸர் இருதயத்திற்கான வேலைப்பளுவை அதிகரிக்கிறது. அதைக் கட்டுப்படுத்தாவிட்டால் எதிர் காலத்தில் இருதய வழுவலுக்கு (Heart failure) இட்டுச் செல்லலாம்.
- உயர் இரத்த அழுத்தம் இருந்தால் இரத்தக் குழாய்கள் தடிப்படைகின்றன. இதனால் மாரடைப்பு போன்ற இருதய நோய்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம்.
- பக்கவாதம் (Stroke) ஏற்படலாம்.
- சிறுநீரகப் பாதிப்பும் பின் சிறுநீரகச் செயலிழப்பும் (Renal failure) ஏற்படலாம். இது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு இட்டுச் செல்லலாம்.
- விழித்திரையின் இரத்தக் குழாய்கள் பாதிப்படைவதால் பார்வை இழப்பு நேரிடலாம்.

கடுமையான நிலையின் அறிகுறிகள்:
இத்தகைய பாதிப்புகள் உள்ளூரப் பாதிக்க ஆரம்பித்த பின்னரே அறிகுறிகள் வெளிப்படையாக தெரியத் தொடங்கும். உதாரணமாக

- கடுமையான தலையிடி
- மூக்கால் இரத்தம் வடிதல்
- பார்வை மங்கல்
- மூச்செடுப்பதில் சிரமம்
- கால் வீக்கம்

போன்ற அறிகுறிகள் நோய் தீவிரமாகி நீண்ட காலம் சென்ற பின்னரே வெளிப்படும்.
பிரசரின் ஆரம்ப நிலையிலோ அல்லது சற்றுத் தீவிரம் அடைந்த நிலையிலோ வெளிப்படையாக எதுவும் தெரியாது. எனவே அத்தகைய அறிகுறிகள் தோன்றும் வரை காத்திருக்காது மருத்துவரிடம் சென்று பிரசரைப் பாருங்கள்.

யாருக்கு வரும்
எவருக்கும் வரலாம் ஆயினும் கீழ்க் கண்டவர்களுக்கு பிரசர் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

- தமது குடும்பத்தில் உயர் இரத்த அழுத்தம், இருதய நோய்கள், நீரிழிவு ஆகிய நோய்கள் இருப்பவர்கள். அதாவது இந்நோய்க்கு பரம்பரை அம்சம் உள்ளது எனலாம்
- வயது 60 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள். வயது செல்லச் செல்ல இது ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம்
- உடலுழைப்பு அற்ற வேலை செய்பவர்கள்
- அதீத எடையுள்ளவர்கள்
- புகைப்பவர்கள்
- அதிகமாக மதுபானம் அருந்துபவர்கள்
- தமது உணவில் உப்பு, கொழுப்பு ஆகியவற்றை அதிகம் உட்கொள்பவர்கள்
- கருத்தடை மாத்திரைகளை உட்கொள்பவர்கள்
- கர்ப்பமாயிருக்கும் போது சில பெண்களுக்கு உயர் இரத்த அழுத்த நோய் வருவதுண்டு

எவரும் தங்கள் இரத்த அழுத்த அளவை இடையிடையே சோதித்துப் பார்ப்பது நல்லது. ஆயினும் மேற் கூறியவர்கள் வருடம் ஒரு முறையாவது சோதித்துப் பார்ப்பது அவசியம்.
பிரசரில் நான்கு நிலைகள் உண்டு. அவையாவன:

| | |
|---|---|
| சாதாரண அளவு | 120/80 க்கு கீழ் |
| முன்நிலை | 140/90 வரை |
| நிலை 1 | 160/100 வரை |
| நிலை 2 | 160/100 க்கு மேல் |

| **Blood Pressure Category** | **Systolic** mm Hg (upper #) | | **Diastolic** mm Hg (lower #) |
|---|---|---|---|
| **Normal** | less than **120** | and | less than **80** |
| **Prehypertension** | **120 – 139** | or | **80 – 89** |
| **High Blood Pressure** (Hypertension) **Stage 1** | **140 – 159** | or | **90 – 99** |
| **High Blood Pressure** (Hypertension) **Stage 2** | **160** or higher | or | **100** or higher |
| **Hypertensive Crisis (Emergency care needed)** | Higher than **180** | or | Higher than **110** |

உங்கள் பிரஸரின் இரண்டு அலகுகளுமே முக்கியமானவை. முன்னைய காலங்களில் மேலே உள்ள அலகான (Systolic blood pressure(SBP) வயதிற்கு ஏற்ப அதிகரிக்கும் அதனால் அதிகம் இல்லை என நம்பப்பட்டது. அது தவறு என பல ஆய்வுகள் மூலம் இப்பொழுது கண்டறியப்பட்டுள்ளது.
முக்கியமான 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் மேலே உள்ள அலகு 140க்கு மேற்பட்டால் அது உயர் இரத்த அழுத்தமே.

தனியாக கீழே உள்ள அலகு சாதாரணமாக இருந்தாலும் மேலே உள்ள அலகு மாத்திரம் அதிகரித்திருந்தால் அதனை Isolated Systolic Hypertension என்பார்கள். அதற்கும் சிகிச்சை அவசியமே.

(30ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# ஒரு குறளும் ஒரு நிகழ்வும்

அந்தத் தபால்காரருக்கு ஆண் குழந்தைகளுக்குப் பலன் இல்லைப் போலும். பிறந்த ஆண் குழந்தைகள் எல்லாம் இறந்து விட்டன. பெண் பிள்ளைகள் மட்டுமே உயிர் பிழைத்தார்கள். ஆண் குழந்தை இல்லையே என்று பெற்றோர்கள் மனம் வருந்தினார்கள்.

இறுதியாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதுவும் இறந்து விடும் என்ற அச்சத்தில் பெற்றார் பெண் வேடமிட்டு வளர்த்தார்கள். ராம் விநாயகக் கோட்சே என்று பெயரிட்டு நீண்ட முடியும் வளர்த்து காதிலே தோடு அணிவித்ததோடு மட்டுமின்றி மூக்கிலே நத்து எனப்படும் மூக்குத்தியும் அணிவித்தார்கள். அதனால் வெறும் ராம் நத்து ராம் ஆகி நாதுராம் ஆனான்.

நாதுராம் சிறிய வயதிலே காந்தி அடிகளின் பிரசங்கத்தை விரும்பிக் கேட்பான். விடுதலைப் போராட்ட உணர்வு அவனுக்கு மிகுந்து வளர்ந்தது. அதனால் ஜனசங்க இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டான் நாதுராம். அங்கே நாராயணன் ஆப்த்தேயும் சர்ஹாரும் நண்பர்களாகக் கிடைத்தார்கள்.
ஆரம்பத்தில் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட நாதுராம் பின்பு அவர் போக்கில் வெறுப்பு அடைந்தான். சுதந்திர இந்தியாவின் சிறந்த பலத்துக்கும் முன்னேற்றத்துக்கும் காந்தியின் அகிம்சை நெறியும் ஒற்றுமை முயற்சியும் தடையானவை என்று நினைத்த நாதுராம் கூட்டத்தினர் காந்தியைக் கொல்ல முடிவெடுத்தனர்.

முதன் முதலாக அவர் பேசிய ஒரு கூட்டத்தில் குண்டு வைத்தான் கோட்சே. குண்டு வெடித்தது. ஆனாலும் அதிஷ்ட வசமாக உயிர் தப்பினார் காந்தி. நான் இறந்த பின்புதான் இந்தக் குழந்தைகள் என் தேவையை உணர்ந்து கொள்ளும் என்று அப்போது சொல்லி வைத்தார் காந்தி.

தன் முயற்சியில் தளராத கோட்சே எப்படியும் அவரைக் கொல்ல முடிவு எடுத்தான். ஜனசங்கத்தில் காந்தியைத் தாமே கொலை செய்ய பலர் விரும்பினாலும் அந்த வேலை கோட்சேவுக்கே தரப்பட்டது.

தன்னுடைய கைத்துப்பாக்கியோடு நண்பர்களிடம் இருந்து கோட்சே விடை பெற்ற போது காந்தியின் உயிரற்ற உடலை அப்போதே தாம் மனக்கண்ணில் கண்டதாக பின் நாளில் சர்ஹார் குறிப்பிடுவார்.
பிருந்தாபவனில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் நுழைந்த கோட்சே காந்தி மகானை நேருக்கு நேராகப் பார்த்துக் கும்பிட்டான். மறுகணமே கும்பிட்ட கைக்குள் மறைத்து வைத்திருந்த தன் கைத் துப்பாக்கியை எடுத்து மூன்றுமுறை சுட்டான்.

இராமா என்றபடியே நிலத்தில் சாய்ந்த காந்தி அவனை ஒன்றும் செய்துவிட வேண்டாம் என்று சைகையால் காட்டிவிட்டு உயிர் நீத்தார். கோட்சே ஓடவில்லை. தன்னையே அழிக்க நினைத்த அவன் முயற்சியும் நிறைவேறவில்லை. அந்த மகான் அருகிலேயே பணிவுடன் நின்றான்.

கைது செய்யப்பட்ட கோட்சேயும் நாராயணன் ஆப்த்தேயும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். சர்ஹார் என்பவர் விடுதலை செய்யப்பட்டார். டில்லிச் செங்கோட்டை மைதானத்தில் தூக்கில் இடப்பட்டார்கள் கோட்சேயும் ஆப்த்தேயும்.

இறக்கும் தருணத்தில் கூட அஹண்ட பாரத் அமர ஹே' என்றே கத்தினான் கோட்சே. பிளவு படாத பாரதம் நீடூழி வாழ்க என்பதே அதன் பொருளாகும்!

அவர்களின் உடல்கள் இந்து வழக்கப்படி அதே இடத்தில் சந்தணக் கட்டைகள் மீது கிடத்தப்பட்டு எரிக்கப்பட்டன. அந்த இடத்தில் யாரும் எதுவும் செய்து விடாதபடி அந்த இடம் உடனேயே உழவு செய்யப்பட்டு புல் விதைக்கப்பட்டது. அவன் போன இடத்தில் புல்லும் முளைத்து விட்டது என்ற பழமொழி கோட்சே வாழ்வில் உண்மையாகி விட்டது.

வள்ளுவர் காந்தி பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஒரு குறள் சொன்னார் எதிரி கை எடுத்து கும்பிட்டாலும் நம்பிவிடாதே. அப்படிக் கும்பிடும் கைக்குள்ளேயே உன்னைக் கொல்லும் ஆயுதம் இருக்கும். அவர்கள் அழுதாலும் அந்தக் கண்ணீர் கூட உனக்கு எதிராக பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதம் தான் என்று எச்சரித்தார் அவர். அதைப் படிக்காமல் போனது காந்தி அடிகளின் குற்றமே!

தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து

ஒன்னார் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - பகைவர்கள் உன்னைப் பணிந்து கும்பிடும் கைக்குள்ளேயும் உன்னை அழிக்கும் ஆயுதம் மறைந்து இருக்கும்: அழுத கண்ணீரும் அனைத்து - அவர்கள் உன் முன்னாலே கண்ணீர் விட்டு அழுதாலும் அது கூட உன்னை ஏமாற்றி அழிக்கும் ஒரு ஆயுதமே ஆகும்.

இந்தக் குறளின் மூலம் நாம் காந்தியையோ கோட்சேயையோ நினைத்துப் பார்ப்பதை விட வள்ளுவரின் ஆற்றலைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனெனில் அவர் இதைச் சொன்ன காலத்தின் கனமே இங்கு முக்கியம் ஆகின்றது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# தமிழரின் கலை கலாசாரம்

கவலைப்படும் விதத்தில்தான் எமது நிகழ்வுகள் மாற்றமடைந்து செல்கின்றன. அதிகபட்ச விளம்பரங்களை உள்வாங்கி, பெரும் செலவில் முன்னெடுக்கப்படும் இத்தகைய கலை விழாக்களில், போதிய கலையம்சங்கள், உரிய அடிப்படைக் கலை நெறிமுறைகளுடன் மேடையேற்றப்படாமல் போவது கவலைக்குரிய விடயமே.

ஒரு காலத்தில் இங்கு மேடையேற்றப்பட்ட பல கலை நிகழ்வுகளில் சிறந்த நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், நாட்டுக் கூத்து வடிவங்கள், நகைச்சுவை நாடகங்கள், இன்னும் விவாத அரங்கம், பட்டிமன்றம், கும்மி, கோலாட்டம் போன்ற மரபுக்கலை வடிவங்கள் அனைத்தும் சிறந்த பயிற்சியுடன் மேடையேற்றப்பட்டு வந்தன.

இவை அனைத்துமே ஒட்டுமொத்தமாக நிறுத்தப்பட்டு விட்டதாக நாம் சொல்ல முடியாது. சிறந்த நாட்டுக் கூத்துக்களும் தரமான நாட்டிய நாடகங்கள் சிலவும் அண்மைக்காலத்தில் மேடையேறி சாதனை படைத்ததை மறுப்பதற்கில்லை. அவை தனியான நிகழ்வுகளாக மேடையேற்றம் கண்டு வெற்றி பெற்றன. எனினும், பொதுவாக ஊர்ச்சங்கங்கள், பாடசாலைச் சங்கங்கள், அமைப்புக்கள், இளையோர் குழுமங்கள் முன்னெடுக்கும் கலை கலாசார நிகழ்வுகள், விடுமுறைகால ஒன்றுகூடல்கள், கோடைகால ஆண்டு நிகழ்வுகளில், சொந்தப் படைப்புக்களின் ஆதிக்கமும், மரபுக் கலை நிகழ்வுகளும் இடம்பிடிக்கத் தவறுவதை அவதானிக்க முடிகிறது.

இந்திய சினிமா மாயைக்குள் சிக்கி, ஒரு சில பாடல்களுக்கான அரைகுறை அபிநயம், அல்லது யாரோ இரண்டு மூன்று வேற்றுநாட்டுப் பெண்களை அழைத்துவந்து அன்னிய மொழிப் பாடலுக்கு அவசர அவசரமாக அபிநயம், கரயோக்கி இசையில் பாடல் என்ற பெயரில், கரயோக்கி இசை மட்டுமன்றி பாடகரின் குரலும் வரும்போது, அதனுடன் இணைந்து பாடுவது என்று, இலகுவான ஒருசில நிகழ்வுகளும், மீதி இரவல் கலை நிகழ்வுகளுமென, எம் கலை நிகழ்வுகள் வடிவமைக்கப்படுவது துரதிஷ்டவசமானது.

முறைப்படி பயின்ற நடனமாக அமைந்தால், அதற்கு எந்த நாட்டுக்காரர் ஆடினாலும் பரவாயில்லை. ஆனால், வடஇந்திய திரைப்படப் பாணியில் சில அசைவுகளையும் நெளிவுகளையும் காட்டிவிட்டு, அடுத்த மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சிக்கு ஓடிப்போய்விடத் துடிக்கும் 'தொழில்சார்' கவர்ச்சி நடனங்கள், எமது கலை நிகழ்வுகளுக்குத் தேவையானவைதானா என்பதை, நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் கவனத்தில் எடுப்பது அவசியம்.

பரதநாட்டியக் கலையும், தமிழிசைக் கலையும், இசை வாத்தியக் கருவிகளை மீட்டும் கலையும், எமது இளையவர் மத்தியில் நன்றாக விருத்தியடைந்து வருவதைக் காண முடிகிறது. இந்தக் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும், உரிய விதிமுறைகளுக்கமைவாக பயிற்சியை வழங்குகிறார்கள்.

எனினும், இத்தகைய கலைகளை மேடை நிகழ்வுகளில் இணைப்பதற்கு நாம் தவறுவது, எமது இளைய தலைமுறைக்கு உரிய காலத்தில் நாம் வழங்கவேண்டிய வாய்ப்பை மழுங்கடிக்கும் முயற்சிகளே. சிறந்த குரல்வளம் உள்ளவர்கள், கரயோக்கி இசையில் தரமான பாடல்களைத் தெரிவுசெய்து பாடுவதும், அப்படிப் பாடுபவர்களுக்கு வாய்ப்பு வழங்குவதும்கூட, முக்கியமான இசைக்கலை வளர்ச்சிக்கான படிக்கற்களே.

நாடகத்திற்கு மட்டும், நாட்டுக்கூத்துக்கு மட்டும், பரதக்கலைக்கு மட்டும் என்று தனித்தனியான மேடை நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதன் மூலம், எமது கலைகளின் வளர்ச்சி தக்க வைக்கப்படுவதற்கான முயற்சிகளை சில கலை ஆர்வலர்கள் முன்னெடுப்பது உண்மையில் பாராட்டிற்குரியது. இருந்தாலும், வழமையாக இடம்பெறும் கலை கலாசார நிகழ்ச்சிகளிலும், எமது பாரம்பரியக் கலை வடிவங்களை உரிய பயிற்சியுடன் உள்வாங்குவது அவசியம் என்பதை நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள் உணர்வது அவசியம்.

காலவோட்டத்தில் எமது கலை வளங்கள் காணாமல்போய், வேற்றுநாட்டவர் தங்கள் பாரம்பரியக் கலைகளாகப் போற்றும் சிலவற்றை, இரவல் நிகழ்வுகளாக மேடையேற்ற எமது மேடைகள் தாரை வார்க்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். சீனர்களின் 'ட்ரகன்' நடனம் அல்லது சீன இளம் பெண்கள் பாரம்பரிய பலவர்ண உடைகளில் ஆடும் பௌத்தமத சார்பான நடனங்கள், சீனர்களின் கோலாட்ட நடனம், ஹிந்தி மொழிப் பாடல்களுக்கான பொலிவூட் 'இரவல்' நடனங்கள், மெக்சிக்கோ நாட்டு 'யராபே' நடனம், ஸ்பானிய 'பொப்' பாணியிலான நடனங்கள், கரீபியன் பாணியிலான கவர்ச்சி நடனங்கள், கபரே நடனம், 'ஜாஸ்', 'ராப்', 'ஹிப்ஹொப்' போன்ற இன்னோரன்ன 'மொடேர்ன்' நடனங்கள் என்று, தமிழரின் கலாசார மேடைகள் போட்டிபோட்டுக்கொண்டு கலாசாரத்தைக் களேபரம் செய்கின்றன. புதுமை செய்கிறோம் என்ற பாணியில், எமது கலைகளைச் சிதைத்து, உதாசீனம் செய்து, தவிர்த்து, ஏனைய நாட்டவரின் கலை வடிவங்களை அளவுக்கதிகமாக உள்வாங்குவது ஆரோக்கியமான வளர்ச்சிதானா?

பொறுப்பிலிருப்பவர்களும், கலை ஆர்வலர்களும் சிந்திப்பது அவசியம்''●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# எண்ணங்கள்

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய்
மகாகவி அன்னையை வேண்டல்.

பாரதி, பராசக்தியிடம் கேட்ட கோரிக்கைகளில் முன்னுரிமை கொடுத்தது நல்ல எண்ணங்கட்கு. நல்ல எண்ணங்களும் நினைவுகளும் என்றோ ஓர்நாள் நிறைவேறும் என்பது அனுபவ வாக்கு. தூய்மையான மனோரதம் தீமையை நாடாது. மனிதம் மனிதத்துவம் மேலோங்க அவர்களின் நல்லெண்ணமே எருவாகும்.

இதுபோல, புத்த பகவான் அட்டசீலங்களை இதற்காகவே அறிமுகம் செய்தார். உள்ளும் வெளியும் ஒன்றாய்த் தொழிற்பட வேண்டும். இந்த மனமும், வாக்கும், செயலும் ஒன்றாய் அமைதலே மனித, ஆத்மீக வாழ்வின் அடித்தளம். சொல்லை ஒத்துச் செயல் மனமும் தூயவர்க்கே பரம்பொருள் காட்சியளிப்பான். இதையே திரிகரண சுத்தியென்பர். புனிதமான உள்ளங்களே இனித வாழ்வின் கருவூலம்.
இக்கருதுகோளையே மகாகவி இப்படிப் பாடினார்.

"வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் -
அதில் மானுடர் வேற்றுமை இல்லை,
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம் -
இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல்காணீர்!"
முரசு 17

இந்த மனம் சும்மாயிராது. அலைமோதும் சுபாவம் உடையது; வாயுவேகத்திற் தொழிற்படும் இந்த உண்மையை ஔவையாரும், வள்ளுவனாரும் பாட்டில் வடித்துள்ளனர்.

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந்து எண்ணுவன"
(ஒருநாழி. ஒருபடி அரிசிச் சோறு)
நல்வழி 29

"ஒருபொழுதும் வாழ்வது அறியார்கருதுப
கோடியு மல்லபிற"
குறள் 337

ஒரு நொடிப்பொழுது அளவும் உடம்போடு உயிர் இணைந்திருப்பதோ நிச்சயமில்லை. ஆனால் எம் எண்ணங்களோ கோடியளவை விஞ்சி நிற்கும். நிலையாமையை உணர்ந்து நாம் புனித வாழ்வை முன்னெடுப்போமாக. இந்த எண்ணங்களே செயற்றிறனின் கெட்டியான நிலைப்பாட்டிற்குக் கால்கோள் என்பது வள்ளுவனார் முடிவு.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"
குறட்பா 467

எந்தவொரு காரியத்தையும் முன்னோட்டமாக ஆராய்ந்து முடிவெடுத்த பின் துவங்குக. துவங்கிய பின் இப்படிச் செய்திருக்கலாமே என கையைப் பிசையக்கூடாது.

"எண்ணிய எண்ணியாங்கெய்துப
எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"
குறட்பா 666

தாமெடுத்துக் கொண்ட கருமத்தைச் செவ்விதாய் நிறைவேற்றுவர், மனத்திட சங்கற்பம் இருந்தால் என்பது இக்குறளின் பொருளாகும்.

ஒரு மனிதனைப் பார்த்து இன்னொருவர் "அவருடைய எண்ணத்தை பாரேன"ப் பொறாமை கொள்கிறார். அங்கேயொரு மனக்காழ்ப்பு வெளிப்படுகிறது. தகுதிக்கு மிஞ்சிய எண்ணங்களும் தரங்குறைந்த எண்ணங்களும் அழிவாசையின் வெளிப்பாடே.

ஒவ்வொரு மனிதனின் எண்ணங்களும் வெவ்வேறானவை. பெண்ணுக்காண் வித்தியாசமானவை. சிறுவர்க்கும் பெரியர்க்கும் மாறுபாடானவை. பொதுவாக நோட்டம் விடின் வெவ்வேறான மனோதர்மங்களை அவதானிக்க முடிகிறது ஒவ்வொரு நபரிடமும்.

ஒரு ஓவியனின் எண்ணமும், ஒரு காவியப் புலவனின் எண்ணமும் வித்தியாசமானவை. ஒரு நடிகைக்கும், சங்கீத மேதைக்கும் எண்ணக்கரு வித்தியாசமானவையே. எழுத்தாளனின் எண்ணமும் கற்றவனின் மனோலயமும் வித்தியாசமானவை. மனமே இதற்கெல்லாம் காரணி என்பர். காதலன் காதலியின் நாடித்துடிப்பு சற்று வித்தியாசமானவையே.
இப்பார்வையிற் சில எண்ண விளைவுகளை இப்படி பார்ப்பர், மனோவியலார்.

எண்ணம் ஒரு நல்ல வேலைக்காரன், அது ஒரு கருவி. இந்த மனம் என்ற காட்டினுள் விலங்குகளின் நடமாட்டம் இருப்பதுபோல் உங்கட்கு தெரியவில்லையா? எண்ணங்களை நான்காகப் பேசுவர்.
வெளிப்படையான அறிகுறிகளோடு எண்ணுதல்
இயல்பு உணர்வால் எண்ணுதல்
உணர்ச்சி வசப்பட்டு எண்ணுதல்
பழக்கங்களின் காரணமாக எண்ணுதல்

எண்ணங்களிற் பலவகை
இயல்பான எண்ணங்கள்
காட்சி எண்ணங்கள்
கேள்வி எண்ணங்கள்
அறிகுறியால் ஏற்படும் எண்ணங்கள்
பழக்கம் காரணமாய்த் தோன்றும் எண்ணங்கள்

மனத்தைக் குரங்காகச் சொல்கிறார் தாயுமானார். அலைந்து திரியும் குரங்கைத் தினமும் கட்டுப்படுத்த வேண்டும்.

"காடுங் கரையு மனக்குரங்கு
கால்விட்டோட, அதன்பிறகே
ஓடுந்தொழிலாற் பயனுளதோ?
ஒன்றாய்ப், பலவாய்,
உயிர்க்குயிராய்
ஆடும் கருணைப் பரஞ்சோதி,
அருளைப் பெறுதற்கு அன்புநிலை
தேடும் பருவ இதுகண்டீர்!"
சேரவாரும் சகத்தீரே!
காடுங் கரையும்!

மாந்தத்தின் மனதைக் குதிரைக்கும் ஒப்பிடுவர். குதிரையின் எங்கேயோர் பகுதியில் அசைவு இருக்கும். அவ்வண்ணமே இந்த மனசும் சும்மாய் இருக்காது. எனவே நாம் எண்ணங்களின் பெருக்கங்களை மட்டுப்படுத்தல் வேண்டுமன்றோ! வெப்பத்தினாற் பனிக்கட்டி தண்ணீராக உருகுகிறது; அவ்வாறே மனமும் சரியான நோக்காலும், உண்மையான எண்ணங்களாலும் நுண்ணிய நிலையை அடைகிறது. எண்ணம் மனத்தளவில் நடைபெறுகிறது. உடலளவால் அல்ல. அன்பு என்பது உள்ளத்தூய்மை. அன்பு என்பது வரையறையற்ற நல்லெண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Selva Vettyvel's Homelife Future Realty Inc.,

# செல்வா வெற்றிவேலின் வீடு விற்பனை முகவர் நிறுவன பத்தாவது வருட விருது விழா

பிரபல வீடு விற்பனை முகவர் செல்வா வெற்றிவேலின் நிர்வாகத்தில் இயங்கும் Homelife Future Realty Inc., நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டிய விருதுகள் வழங்கும் விழா வெற்றிகரமான நிகழ்வாக கடந்த மாதம் 23ஆம் திகதி ஸ்காபரோ பீட்டர் அன்ட் போல் மண்டபத்தில் நடைபெற்றது. இருநூறுக்குமதிகமான வீடு விற்பனை ஏஜன்டுகள் தமது குடும்பத்துடன் மற்றும் சட்டவாளர்கள், நண்பர்கள் சகிதம் மண்டபம் நிறையத் திரண்டிருந்தனர். செல்வா வெற்றிவேலின் வீடு விற்பனை நிறுவன வரலாற்று விளக்க உரையைத் தொடர்ந்து, விருதுகள் வழங்கப்பட்டன. பிரதான விருதுகளைப் பெற்றவர்கள் விபரம்: **Top Producer**: Ruby Thambiah, **Hall of fame**: Siva Shanmuganathan, **Top Listing Agent**: Sugan Sivarajah Team, **Top Producing Team**: Siva & Joy. **Chairman Club**: Raj Nadarajah, Sathy Sivasubramaniam, Krish Sivapatham, Shankar Manickam, Joy Selvanayagam, Sugan Sivarajah, Ruby Thambiah, Siva Shanmuganathan.**Rookie of the year**: Abi Amalan **TD Bank Award**: Shankar Manickam











(20ஆம் பக்கம் வருக)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Outstanding achievements in the field
# வீடுகள் சொத்துகள் விற்பனைச் சந்தை

கனடியத் தமிழர்கள் என்று இன்று அழைக்கப்படுபவர்கள் சில காலத்துக்கு முன்னர்வரை 'அகதிச் சமூகம்' என்று அழைக்கப்பட்டவர்கள். 1983, 1989, 1995 என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசாங்கங்களாலும் இராணுவங்களாலும் மோசமாக ஈழத்தமிழர்கள் தாக்கப்பட்டதால் அவர்கள் அகதிகளாக புலம்பெயர நேர்ந்தமை வரலாற்றில் எழுதப்பட்டுள்ள சோக வரலாறு.

புகலிடங்களில் அடைக்கலம் புகுந்துள்ள சுமார் பத்து லட்சம் தமிழர்களில் மூன்று லட்சம் வரையானவர்களுக்குக் கனடிய நாடு அபயமளித்தது. இதனால், புகலிடத் தமிழர்களுக்குத் தலைமை தாங்கும் சக்தியாக கனடியத் தமிழர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




கல்வித்துறை மேம்பாடு, பண்பாட்டு வளர்ச்சி, பாரம்பரியப் பேணல், சமூகம்சார் பணிகள், ஆன்மீகச் செயற்பாடு, பன்மைப்பண்பாட்டுடன் ஒத்துவாழ்தல் என்பவற்றோடு, வணிகத்துறையின் ஈடுபாடும் உயர்ச்சியும் இங்கு முக்கியமாக அவதானிக்கப்படுகின்றன. பொதுவாகப் பார்க்கின், ஒரு சமூகத்தின் அல்லது புதிய நாடொன்றில் குடியேறிய ஓரினத்தின் வளர்ச்சியை அதன் பொருளாதார அபிவிருத்தியில், குறிப்பாக அதன் வணிகத்துறை முன்னேற்றத்தை வைத்தே எடைபோடுகின்றனர்.

கனடாவில் தமிழினத்தின் வளர்ச்சியும் உயர்ச்சியுமென்பது மூன்று தசாப்தங்களை மட்டும் வைத்துப் பார்க்கப்படவேண்டியது. இவ்வளவு குறுகிய காலத்துள் கனடிய மூன்று அரசியல் வரம்புகளிலும் ஈழத்தமிழர் ஓரளவுக்கு ஓர் இலக்கை எட்டிப் பிடிக்க முனைந்ததற்கான ஆதார அடித்தளமாக அமைந்தது இவர்களின் பொருளாதார/வணிக முன்னேற்றம் என்பதில் மறுப்பிருக்க முடியாது.

கனடாவில் சுமார் ஐயாயிரம் வரையான தமிழர் நேரடியாகவும் மறைமுகமாகவும் வணிகத்துறையில் ஈடுபட்டிருக்கின்றனர். வெளித்தோற்றத்தில் வர்த்தக மற்றும் உணவுச்சாலைகள் மட்டுமே அதிகமாகவிருப்பதாகத் தெரிந்தாலும், அதற்கும் அப்பால் முதலிடத்தில் நிற்பது Real Esatate என்று சொல்லப்படும் வீடுகள்/சொத்துகள் விற்பனைத்துறைதான். இத்துறையில் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான எம்மவர்கள் (2500 வரையென்றும் சிலர் சொல்கின்றனர்) ஈடுபட்டுள்ளதாக ஒரு கணக்கெடுப்பு மூலம் அறிய முடிகின்றது.

கனடாவில் இத்துறையில் ஒரு சுயாதீன புறோக்கராக (Independent Broker) விளங்கும் Homelife/Realty நிறுவன அதிபர் திரு. செல்வா வெற்றிவேலின் நிறுவனத்தில் மட்டும் சுமார் 265 பேர் வரை முகவர்களாகப் பணியாற்றுகின்றனர். இது ஒரு 'கின்னஸ்' சாதனையாகக் கொள்ளப்பட வேண்டியது. பத்தாண்டுகளுக்கு முன்னர் ஒரு முகவராகவிருந்த செல்வா, கனடிய தமிழ்ச் சமூகத்தில் வீடுவிற்பனை முகவர்களுக்கான இலவச வகுப்புகளை முதன்முதலாக ஆரம்பித்த பெருமைக்குரியவர்.

(சில வருடங்களுக்கு முன்னர் வாகன சாரதி பயிற்சி நிலையங்களை சுமார் நூறு வரையான தமிழர் நடத்தி வந்ததும், தற்போது விருந்துபசார மண்டபங்களை (Banquet Halls) நிர்வகிக்கும் தொழில் முயற்சி எம்மவர் மத்தியில் அதிகரித்து வருவதும் இங்கு கவனிப்புக்குரியவை.)

## சிறப்புக் க

வீடு/சொத்துகள் விற்பனைத்துறையென்பது தமிழர்களைப் பொறுத்தளவில் ஐந்து வகையான விருத்திகளைக் கண்டுள்ளது. ஆரம்பத்தில் ரொறன்ரோ மற்றும் ஸ்காபரோ நகரங்களை மையப்படுத்தியதாக விற்பனைகள் இருந்தன. பின்னர் ரொறன்ரோ பெரும்பாகமான மிசிசாகா, பிராம்டன், மார்க்கம், றிச்மன்ட்ஹில், ஒரோரா, பிக்கரிங், ஏஜக்ஸ், விற்பி ஆகிய நகரங்களுக்கும் விரிவடைந்தது. தற்போது லண்டன், வின்ட்சர், ப(B)ரி, கிங்ஸ்ரன் ஆகிய ஒன்ராறியோவின் மற்றைய நகரங்களுக்கும் சென்றுள்ளது.

அதுமட்டுமன்றி, வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கனடாவில் வீடுகள் சொத்துகளை வாங்குவதற்கும் இவர்கள் ஏற்பாடுகளைச் செய்துகொடுத்து முகவர்களாகப் பணியாற்றுகின்றார்கள். வளர்ந்துவரும் கணினித் தொழில்நுட்பம் இவர்களுக்குப் பெரிதும் உதவுகின்றது.

அத்துடன், ரொறன்ரோ பகுதிகளில் பல வர்த்தக நிறுவனங்களின் விற்பனைகளிலும் எம்மவர் பங்களிப்பு கணிசமான அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இதற்கு உதாரணமாக, வேற்றின மொழிகளில் இடம்பெறும் தமிழரான முகவர்கள் மற்றும் புறோக்கர்களின் விளம்பரங்களைக் கூறலாம். விளம்பரப்படுத்தல் என்பது தமிழ் ஊடகங்களுக்கு அப்பால் செல்லும்போது, அது புதிய பரிணாமத்தை அடைகின்றது.

புதுமுறை நவீன விளம்பரங்கள் கவர்ச்சிகரமானவை. இவ்வகையில் மூன்று தமிழர்கள் கண்கவர் கவர்ச்சி விளம்பரங்களைப் பெரும் பொருட்செலவில் மேற்கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

றாஜீவ் கோணேஷ்வரன், உதயன் பொன்னுத்துரை, பஞ் சொக்கலிங்கம் ஆகிய மூவரும் பெயர் சொல்லிக் குறிப்பிடப்பட வேண்டிய பிரதானிகள்.

தென்னக சினிமா 'கட்அவுட்' பாணியில், காலத்தின் தேவையுணர்ந்த வீதியோர அசையா விளம்பரங்களில் றாஜீவ் கோணேஷ்வரன் காட்சியளிக்கிறார். இந்த விளம்பரங்களைப் பார்ப்பவர்கள் அதிலொரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ield of Real Estate by Canadian Tamils
# தையில் கனடியத் தமிழரின் சாதனைகள்

வித்தியாசத்தை அவதானிக்கின்றனர். அதனை உற்று நோக்குபவர் மனதில் ராஜீவ் என்ற பெயர் இலகுவாகப் பதிந்து விடுகின்றது. சமூக அக்கறையுடன் புறோக்கராக வணிகம் புரியும் ராஜீவ் கோணேஷ்வரனுக்கு, வீதியோர விளம்பரம் நிச்சயம் பெருவெற்றியாக அமைந்திருக்கும் எனலாம்.

## ுக் கட்டுரை

றொறன்ரோ பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான உதயன் பொன்னுத்துரை கடந்த பத்தாண்டு கால வீடு/சொத்து விற்பனையின் அனுபவசாலி. தமிழர் சமூகத்துள் மட்டுமன்றி அதற்கும் வெளியே சென்று பல்லின மக்கள் மத்தியில் உதயன் பிரகாசித்து விளங்குகின்றார். அவரது விளம்பரத்தைத் தாங்கிய ஐந்து மகிழுந்துகள் (மோட்டார் வாகனங்கள்) றொறன்ரோ வீதிகளில் ஓடித்திரிந்து, புதுவகை அறிமுகத்தை அவருக்கு வழங்குகின்றன. சமூக அக்கறை சார்ந்த மற்றொரு வீடு/சொத்துகள் விற்பனை புறோக்கர் உதயன் பொன்னுத்துரை.






'தமிழர் தகவல்' 2012: வணிகத்துறை விருது
ரூபி தம்பையா (HomeLife/Future Realty Inc.,)

(சில மாதங்களுக்கு முன்னர் ஸ்காபரோ கிழக்கிலுள்ள 'ரிம் ஹோட்டன்ஸ்' ஒன்றில் கோப்பி அருந்திக் கொண்டிருந்தபோது உதயன் பொன்னுத்துரையின் விளம்பரத்தைத் தாங்கிய வாகன-மொன்றைப் பார்த்த பின்னரே இக்கட்டுரை எழுதும் சிந்தனை உருவானதென்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)

கனடிய வீடு/சொத்துகள் விற்பனையில் நன்கு அறிமுகமான ஒருவர் பஞ் சொக்கலிங்கம். இருபதாண்டுகளுக்கு முன்னர் கனடிய வங்கியொன்றில் கடமையாற்றிய பஞ், பத்தாண்டுகளுக்கு முன்னரே இத்துறையில் கால் பதித்து, தற்போது பிரபலமான முகவராக விளங்குகின்றார். ஸ்காபரோவின் பிரதான வீதிகளில் ஓடித்திரியும் ரி.ரி.சி பேருந்துகளின் (பஸ் வண்டிகள்) பின்புறத்தில் அட்டகாசமாக இவரது விளம்பரம் இடம் பெற்றிருப்பதால், தமிழ் தெரியாதவர்களுக்கும் இவர் இப்போது தெரிந்தவராகியுள்ளார். தனது வாடிக்கையாளர்களில் (clients) அறுபது வீதத்துக்குமதிகமானவர்கள் தமிழரல்லாதவர்கள் என்று கூறுகிறார் பஞ் சொக்கலிங்கம்.

1990ம் 2000ம் ஆண்டுகளில் தமிழரின் பல்வேறு விழாக்களில் மேடை ஸ்பொன்சர்களாகவிருந்த எமது வணிகப் பெருமக்களின் விளம்பரப் பதாதைகள் மேடைகளை அலங்கரித்ததை அவதானித்தோம்.

தொடர்ந்து, ஊர்ச் சங்கங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் பூங்காக்களில் ஒன்றுகூடல்களை நிகழ்த்திய வேளையில் பூங்காக்களை எம்மவர் பதாதைகள் அலங்கரிக்கக் கண்டோம். ஒரு தடவை - ஒரேயொரு தடவை தமிழ் வணிக விளம்பர பதாதையுடன் வாடகை விமானமொன்று றொறன்ரோ நகரில் சுற்றிச்சுற்றி பறந்ததையும் மறக்க முடியாது.

இங்குள்ள பல வாடகைக் கார்கள் (டாக்சிகள்), அதன் மேற்பகுதியில் வெளிச்சம் காட்டும் விளம்பரங்களைப் பொருத்தியுள்ளதைப் பார்க்கின்றோம். கார்டினர் நெடுஞ்சாலையில் பச்சைப் புல்வெளியில் செங்குத்தாக பல விளம்பரங்கள் வெள்ளை நிறத்தில் பளிச்சிடுவதைக் காண்கின்றோம். சில பிரதான வீதிகளில் இருமருங்கிலுமுள்ள உயர்ந்த கட்டிடங்களில் டிஜிட்டரில் ஓடிக்கொண்டிருக்கும் விளம்பரங்களைக் கண்ணுற்று வியக்கிறோம்.

இவைகளிலும், இவற்றுக்கு அப்பாலும் ஈழத்தமிழர் பிரகாசிக்க வேண்டும். இதனை இப்போது நிறைவேற்றும் வளமும் தளமும் உள்ளவர்கள் எங்களின் வீடு/சொத்துகள் வணிகத்துறையினரே. கனடிய மையச் சமூகமும், வந்தேறுகுடிச் சமூகங்களும் தமிழ்ச் சமூகத்தை ஒருதடவை திரும்பி பார்க்க இன்னும் பல செல்வா வெற்றிவேலு, ராஜீவ் கோணேஷ்வரன், உதயன் பொன்னுத்துரை, பஞ் சொக்கலிங்கம் வேண்டும்.




நினைத்தால் முடியும்!

- திரு எஸ். திருச்செல்வம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா வெற்றிவேலின் வீடு விற்பனை முகவர் நிறுவன பத்தாவது வருட விருது விழா (17ஆம் பக்கத் தொடர்)








## Scarborough Rough River ONDP and Tamil New Democrats

# Celebrating Momentum, Leadership and Solidarity

ஸ்காபரோ றூஜ்றிவர் ஒன்ராறியோ என். டி. பி மற்றும் தமிழ் என். டி. பி அமைப்பு இணைந்த வருட இறுதி ஒன்றுகூடல் கடந்த 7ஆம் திகதி ஸ்காபரோ பிரின்சஸ் விருந்தினர் மண்டபத்தில் நடைபெற்றது. கட்சியின் ஒன்ராறியோ தலைவி அன்ட்ரியா ஹோவர்த் பிரதம விருந்தினராகக் கலந்த இந்நிகழ்வின் சில படங்கள் இங்கு பிரசுரமாகின்றன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்



# போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம் பாவாய்! 62

மாணிக்கவாசகரது இயற்பெயர் வாதவூரர். மாணிக்கவாசகர் வாழ்ந்தது கொஞ்சக் காலம்தான். அவர் மறைந்தபோது அவருக்கு அகவை முப்பத்திரண்டு மட்டுமே. அரிமர்த்தன பாண்டியன் அவையில் அமைச்சராக இருந்தவர்.

ஒருநாள் அரசவை கூடியிருக்கும் போது திருப்பெருந்துறையில் மேலைநாடுகளில் இருந்து வணிகர்கள் நல்ல உயர்ந்த சாதிக் குதிரைகளோடு தரையிறங்கி இருப்பதாக அரிமர்த்தன பாண்டியனிடம் தூதுவர்கள் வந்து சொன்னார்கள்.

குதிரைப் படைகளுக்கு மேலதிகமாகக் குதிரைகள் தேவைப்பட்டது. திருப்பெருந்துறையில் வந்திறங்கிய குதிரைகளில் நல்ல குதிரைகளாகப் பார்த்து அவற்றைக் குறைந்த விலையில் வாங்கி வருமாறு அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகரைப் பணித்தான். அதற்குத் தேவையான பொருளை கருவூலத்தில் இருந்து எடுத்து அரண்மனை மெய்ப் பாதுகாப்பாளர்களுடன் செல்லுமாறு சொன்னான்.
திருப்பெருந்துறையை அடைந்த மாணிக்கவாசகர் அங்குள்ள சிவன் கோயில் சிதிலம் அடைந்து இருப்பதைக் கண்டு மனம் நொந்தார். மன்னன் அளித்த பணத்தைக் கொண்டு அக் கோவிலைப் புதுப்பித்தார். குதிரை வாங்கப் போனவர் குதிரை வாங்கவில்லை. மாதங்கள் பல சென்றன. மாணிக்கவாசகர் மதுரை திரும்பவில்லை. இதனை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் சினம் கொண்டு மதுரை திரும்புமாறு மாணிக்கவாசகருக்கு ஓலை அனுப்பினான்.

ஓலையைப் படித்த பின்னர்தான் சிவன் பற்றிய சிந்தனையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு மாணிக்கவாசகர் திரும்பினார். மன்னனுக்கு வாக்களித்தபடி குதிரை வாங்கவில்லை. கொண்டு வந்த பொருள் எல்லாம் கோயில் திருப்பணிக்கு செலவு செய்தாகிவிட்டது. மன்னன் கோபித்துக் கொள்ளப் போகிறான்.

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் மாணிக்கவாசகரது குருநாதர் இருந்தார். மன்னனுக்குக் குதிரைகள் எப்படியாவது வாங்கிக் கொண்டு போக வேண்டுமே அதற்கு என்ன செய்வது என்று வருந்தினார்.

"மாணிக்கவாசக' கவலை கொள்ளற்க. வருகிற ஆவணிமூல நாளன்று உயர்ந்த சாதிக் குதிரைகள் மதுரை வந்து சேரும் எனச் சொல். நீ செலவிட்ட பொருள் ஒருபோதும் வீண்போகாது. அதற்காக வருந்த வேண்டாம்" என்று குரு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தார்.

அரசவை கூடியது. விசாரணை தொடங்கியது. இன்னும் பத்தே நாட்களில் குதிரைகள் வந்து சேரும் என மாணிக்கவாசகர் உறுதிபடக் கூறினார். இதற்குள் இன்னொரு அமைச்சர் "மாணிக்கவாசகர் கூறுவது பொய். திருப்பெருந்துறையில் ஒரு குதிரை கூடக் காணப்படவில்லை. திருப்பெருந்துறையில் இருந்து குதிரைககள் இங்கு வந்து சேர்வதற்குக் குறைந்தது ஒரு வாரமாவது செல்லும். இன்னும் இரண்டே நாட்களில் எப்படிக் குதிரைகள் வந்து சேரும்?" எனக் கேட்டார். மன்னர் மாணிக்கவாசகரை அழைத்து வைகைக் கரையில் சுடுமணலில் நிறுத்தி வைத்துத் தண்டித்தான்.

இதன் பின் நடந்த கதை எல்லோருக்கும் தெரியும். சிவன் நரிகளைக் குதிரைகளாக்கிக் கொண்டுவந்து மன்னனிடம் காட்டினார். ஆனால் அன்று இரவே பரிகள் மீண்டும் நரிகளாக மாறிவிட்டன. இப்படி நரி பரியாகி மீண்டும் நரியாகிய கதை சிவனின் 64 திருவிளையாடல்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. இன்றும் திருப்பெருந்துறையில் உள்ள ஆத்மநாதர் கோயிலுக்குள் மாணிக்கவாசகருக்குச் சிறப்பு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அவரது பெரிய திருவுருவம் அங்கு இருக்கிறது. ஆதி சைவர்கள் ஆகமவிதிப்படி பூசை செய்து வருகிறார்கள். ஆனால் ஏனைய கடவுளருக்கு வைதீகப் பிராமணர்களால் வைதீக நெறிப்படி பூசை நடைபெறுகிறது.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.
14

காதில் அணிந்துள்ள குழைகள் ஆட, பொன் அணிகலன்கள் ஆட, பூமாலையணிந்த கூந்தல் ஆட, (அதைச் சுற்றும்) வண்டுக் கூட்டம் ஆட, குளிர்ந்த நீராடிச் திருச்சிற்றம்பலத்தைப் பாடி, வேதத்தின் பொருளைப் பாடி, இறைவன் அந்த வேதத்தின் பொருள் ஆகும் திறத்தினைப் பாடி, அவனுடைய சோதி வடிவின் பெருமையைப் பாடி, கவன் அணிந்துள்ள கொன்றைக் கொத்தினைப் பாடி, எல்லாவற்றிற்கும் முதல்வனாக இருக்கின்ற வல்லமையைப் பாடி, அவனே எல்லாவற்றிற்கும் இறுதியும் ஆவதைப் பாடி, (மும்மலம் ஆகிய) பிறவற்றை நீக்கி நம்மை வளர்த்தெடுத்த இறையருட் சத்தியின் பாதத் தத்துவத்தையும் பாடி நீராடுங்கள்'

பைம்பூண் - பொன்னாபரணம், கோதை - பூமாலை, குழாம் - கூட்டம், சீதம் - குளுமை, தார் - மாலை.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, ஆண்டாளின் திருப்பாவை ஆகியவற்றைக் கண்டு அதைப் போன்றே சமணரான அவிரோதி நாதரால் இன்னொரு திருவெம்பாவை அதே சந்தத்தில் இயற்றப்பட்டிருக்கிறது. இந்தத் திருவெம்பாவையில் அருகனைப் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. இந்த நூலில் சமணர்களது வழி காட்டிகளாகிய தீர்த்தங்கரர்களைப் போற்றிப் புகழப்பட்டுள்ளது. இருபது பாடல்கள் மயிலைநாதர் மேல் பாடப்பட்டுள்ளன. மயிலைநாதர் என்பது மயிலாப்பூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளியுள்ள நேமிநாதரைக் குறிக்கிறது. சான்றாக ஒரு பாடலைக் பார்ப்போம்.

கரக் குழலாட மாணிக்கப் பூணாடச்
சிகரக் குழலாட செறிவண் டிசைபாட
முகரப் புனலாடி முக்குடையான் தாள்பாடி
விகலக் கவிபாடி வேதப் பொருள்பாடிச்
சகல சிநத் திறைவன் தன்னனைய தாள்பாடிப்
புகலாம் பதியருகன் பொற்றா மரைபாடி
இகலார்ந் தெனையளித்த வெற்கையான் தாள்பாடி
பகரும் பிறப்பறவே பாடேலோ ரெம்பாவாய்
(14)

சிநன் = ஜினன், முகரம் = சங்கு, விகலக் கவி = குறையற்ற கவி, வெற்கையான் = வெற்றியுடைவன்

திருவெம்பாவையின் கடைசிப் பாடல் (20) போற்றி, போற்றி என ஒவ்வொரு அடியும் தொடங்குகிறது.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.
(20)

எப்பொருளுக்கும் முதலாயுள்ள உன் திருவடி மலருக்கு வணக்கம். எவற்றுக்கும் முடிவாயுள்ள, செந்தளிர் போலும் திருவடிகளுக்கு வணக்கம், எல்லாவுயிர்களுக்கும் தோன்றுதற்குக் காரணமாகிய பொன்போன்ற திருவடிகளுக்கு வணக்கம், எல்லாவுயிர்களுக்கும் நிலைபெறுதற்குரிய பாதுகாப்பாகிய அழகிய கழலணிந்த திருவடிகளுக்கு வணக்கம். எல்லாவுயிர்களுக்கும் முடிவு எய்துதற்குக் காரணமாகிய திருவடிகள் இரண்டிற்கும் வணக்கம். திருமாலும், பிரமனும், காணமுடியாத திருவடித் தாமரை மலருக்கு வணக்கம். நாம் உய்யும்படி ஆட்கொண்டருளுகின்ற தாமரை மலர்போலும் திருவடிகளுக்கு வணக்கம். இங்ஙனம் கூறிப் போற்றி இறைவனை வணங்கி, நாம் மூழ்குவதற்குரிய மார்கழி நீரில் ஆடுவோமாக.

திருவெம்பாவை, திருப்பாவை, அவிரோத நாதர் பாடிய திருவெம்பாவை ஆகிய பாடல்களில் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் தமிழின் இனிமையையும் ஓசைச் சிறப்பையும் பொருள் நயத்தையும் பரக்கக் காணலாம். இந்த பக்தி இலக்கியங்கள் தமிழ்மொழிக்குக் கிடைத்த கொடை ஆகும்.
(தொடரும்)●




பா(f)ன்ஸி பூக்கடை

Fancy Florist

பூஜைக் களஞ்சியம்



**Fancy Florist International Inc.**
**An International Flower Shop**

*We deliver Garlands, jasmine and gifts anywhere in the world on the date you select when placing orders through our three on-line Flower Shops.*

**To send jasmine, garlands and gifts**
**Anywhere in Canada**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.ca**
**Phone: (416)288-1419**
***In Canada, the local pick up is at***
**5633 Finch Ave, East, Unit # 6,**
**Scarborough, Ont. M1B 5K9**

**To send jasmine, garlands and gifts**
**Anywhere in USA**
**Place the order on line at Flower shop**
**www. fancyflorist.com**
**Phone: (716) 838-0844**
***In USA, the local pick up is at***
**2119, Eggert Road**
**Amherst, NY, 14226**

**To send jasmine, garlands and gifts**
**Europe, Middle East, India, Sri Lanka**
**Singapore, Malaysia**
**Place the order on line at Flower shop**
**www.fancyflorist.in**
**Phone: (716) 838-0844**
***In India, the local pick up is at***
**12 Ghandhi St, BT Nagar,**
**Gerugambakkam, Chennai**

*Place the order in any one of our three on-line Flower Shops to send temple garlands to your favorite temple in Canada, USA, India, Sri Lanka, Singapore and Malaysia*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Promar Ltd., Awards & Promotions Appreciation Night
# 'புறோமார்' நிறுவன 10வது அண்டு மதிப்பளிப்பு நிகழ்வு

ஸ்காபரோவில் தமிழருக்குப் பெருமை சேர்க்கும் கலையகமாகத் திகழும் புறொமார் நிறுவனத்தின் பத்தாவதாண்டு பூர்த்தியை முன்னிட்ட மதிப்பளிப்பு இரவு கடந்த மாதம் 22ஆம் திகதி ஸ்காபரோ பாபா விருந்தினர் மண்டபத்தில் இடம்பெற்றது. கவிஞரும் எழுத்தாளருமான எஸ். விவேகானந்தனின் கைவண்ணமும் கலைவண்ணமும் இணைந்து முன்னேற்றமடைந்து வரும் இந் நிறுவனம் தமிழர் வாழ்வில் பிரிக்க முடியாத அங்கமாக மாற்றம் பெற்றுள்ளது. அரசியல்வாதிகள், துறைசார் நிபுணர்கள், வணிகப் பெருமக்கள், கலைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், நண்பர்கள் என்று பன்முகப் பிரமுகர்கள் இவ்வைபவத்தில் பங்குபற்றி விவேகானந்தனின் நற்பணிகளையும், வணக முயற்சிகளையும் பாராட்டிப் பேசினர். நிகழ்வில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இப்பக்கத்தில்.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

## Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome



**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |


Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்



- மரண அறிவித்தல்கள் வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high with your thoughts

PRO MAR Ltd.



- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

Vivek Subra
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!

One stop for all your promotional needs.



PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

Why think so long...?



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846


Homelife/Future
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated



NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# சர்வதேச டென்னிஸ்

நடப்பு ஆண்டின் ஐ.டி.எப். உலக சாம்பியன் விருதை, செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச், அமெரிக்க வீராங்கனை செரினா வில்லியம்ஸ் பெற்றனர்.

சர்வதேச டென்னிஸ் கூட்டமைப்பு (ஐ.டி.எப்) சார்பில், ஆண்டு தோரும் டென்னிஸ் போட்டிகளில் சிறந்து விளங்கும் நட்சத்திரங்களுக்கு, உலக சாம்பியன் விருது வழங்கி கவுரவிக்கப்படும். இந்த ஆண்டு விருதுக்கு, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 25, தேர்வு செய்யப்பட்டார். இரண்டாவது முறையாக ஆண்டு இறுதியில் "நம்பர்-1' இடத்தை தக்கவைத்துக் கொண்ட இவர், ஆஸ்திரேலிய ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றார். பிரெஞ்ச் மற்றும் யு.எஸ்., ஓபனில் பைனல் வரை முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையரில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 31, தேர்வு செய்யப்பட்டார். விம்பிள்டன், யு.எஸ்., ஓபனில் பட்டம் வென்றதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தின் எண்ணிக்கையை 15 ஆக உயர்த்திய இவர், லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார்.

ஆண்கள் இரட்டையரில், அமெரிக்காவின் பாப், மைக் பிரையான் ஜோடி, பெண்கள் இரட்டையரில் இத்தாலியின் சாரா இரானி, ராபர்டா வின்சி ஜோடிக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

அதிகம் சம்பாதித்த டென்னிஸ் நட்சத்திரங்கள்' இந்த ஆண்டுக்கான ஆடவர் சர்வதேச டென்னிஸ் (ஏ.டி.பி.) மற்றும் மகளிர் சர்வதேச டென்னிஸ் (டபிள்யூ.டி.ஏ.) போட்டிகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. இதையடுத்து 2012ம் ஆண்டில் அதிக பரிசுத்தொகை வென்ற வீரர், வீராங்கனைகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஆடவர் பிரிவில் 'நம்பர் ஒன்' வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் முதலிடத்தை பிடித்துள்ளார். அவர் இந்த ஆண்டில் போட்டிகளின் மூலம் ரூ.70.50 கோடியை பரிசுத்தொகையாக அள்ளியிருக்கிறார்.

2வது இடத்தில் ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றவரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உள்ளார். காயம் காரணமாக சில மாதங்களாக ஆடாததால் ஸ்பெயினின் ரபெல் நடால், வருமானத்தில் 4வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

மகளிர் பிரிவில், தரவரிசையில் முதலிடத்தில் உள்ள பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அசரென்கா ரூ.43.50 கோடியை பரிசுத்தொகையாக பெற்று முதலிடத்தை தட்டிச்சென்றுள்ளார்.

ஒலிம்பிக் சாம்பியனும், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய கிராண்ட்ஸ்லாம் மகுடங்களை கைப்பற்றியவருமான சாதனை மங்கை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ரூ.39 கோடியுடன் 2வது இடத்தில் உள்ளார்.




இந்த ஆண்டில், டென்னிசில் அதிகம் சம்பாதித்த டாப்-5 வீரர்கள் விபரம்:

1. நோவக் ஜோகோவிச் (செர்பியா) ரூ.70.50 கோடி
2. ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ரூ.47.50கோடி
3. ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) ரூ.31.50 கோடி
4. ரபெல் நடால் (ஸ்பெயின்) ரூ.27.50 கோடி
5. டேவிட் பெர்ரர் (ஸ்பெயின்) ரூ.24.25 கோடி

டாப்ஃ5 வீராங்கனைகள் விபரம்:

1. விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) ரூ.43.50 கோடி
2. செரினா வில்லியம்ஸ் (அமெரிக்கா) ரூ.39 கோடி
3. மரியா 'ரபோவா (ர'யா) ரூ.36 கோடி
4. அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா (போலந்து) ரூ.22.50 கோடி
5. சாரா எர்ரானி (இத்தாலி) ரூ.17.25 கோடி

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer


Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

## வெள்ளிப் பணம் 71

# வரிகளுக்கான சொர்க்க நாடுகள்

வரிகளுக்கான சொர்க்கம் (Tax Heaven) என்னும் வார்த்தைப் பிரயோகம் பொதுவாக வரிகள் இல்லாத அல்லது சிறிய அளவினைக் கொண்ட வரி விதிப்புக்களை உடைய விடயத்தினை 'வரிகளுக்கான சொர்க்கம்' என்கிறார்கள்.

இன்று உலகில் பல நாடுகள் (Tax Heaven Countries) வரிகளுக்கான சொர்க்க நாடுகளாகக் காணப்படுகின்றன. இவற்றில் கரிபியன் தீவுகளில் உள்ள Dominica, St.Kitts, Nevis, Barbados, Anguilla, The British, Virgin Island (BVI), Belize, Bahamas என்பவற்றைக் கூறிவிடலாம். ஐரோப்பிய நாடுகளுக்குள் Liechtenstein, Gibraltar, Switzerland, Cyprus, Luxembourg என்பவற்றைக் குறிப்பிடலாம். மற்றும் சிங்கப்பூர், பனாமா குடியரசு என்பவை குறிப்பிடக் கூறக்கூடியவை.

இதன் வரலாற்றினை சற்றுப் பின்நோக்கிப் பார்த்தால் 14ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கிரேக்கத்தில் உள்ள ஏதேன் நகரத்தில் கடல் வியாபாரத்தில் வெளிநாட்டுப் பொருட்களுக்கு இரண்டு சதவீத வரிவிலக்கு கொடுக்கப்பட்டதுதான் இதன் ஆரம்பம் எனக் கூறப்பட்டாலும் 1721 காலப் பகுதியில் வட அமெரிக்கா, தென்னமெரிக்கா நாடுகளுக்கான வியாபார நடவடிக்கைக ளுக்கு பிரித்தானியா வரிவிலக்கு கொடுத்திருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக லிச்சென்ரின் (Liechtenstein) 1926ல் முதலீடுகளை ஊக்குவிக்கும் வரிச்சலுகையை அறிமுகப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக 1935 ஆண்டு காலப்பகுதியில் சுவிற்சர்லாந்து இத்திட்டத்தினை அறிமுகப் படுத்தியது. பெரும்பாலான பொருளியல் அறிஞர்கள் சுவிஸ் தான் முதன்முதலில் தனிப்பட்ட ரீதியிலும் சரி நிறுவனப்படுத்தப்பட்ட வகையிலும் சரி இரகசிய வங்கிக்கணக்குகளை ஆரம்பிப்பதற்கான வசதி செய்தது எனக் கூறுகின்றனர். அதற்குப் பின்னரே லிச்சென்ரின் (Liechtenstein) என்கின்ற நாடு ஆரம்பித்ததாகக் கூறுகின்றனர். இன்று பல நாடுகள் வெளிநாட்டு மூலதனத் தினை தமது நாட்டுக்குள் கொண்டுவருவதற்காக (Tax Heaven Countries) வரிக்கான சொர்க்கபுரி நாடுகளாக மாறியுள்ளன. இருப்பினும் எல்லா நாடுகளும் ஒரே மாதிரியான சட்ட திட்டங்களுடன் வேற்று நாட்டு முதலீடுகளைக் கவரவில்லை. நாடுகளுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படு கின்றன. சில நாடுகள் பெரும் பல்தேசிய கம்பனிகளுக்கான வரிவிலக்கு கொடுக்கின்றன. தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காத நாடுகளும் உண்டு. சில நாடுகள் இரண்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன.

பெரும்பாலான கனடிய, அமெரிக்கக் கம்பனிகள் தமது வியாபார நடவடிக்கையை தமது நாட்டில் செய்துகொண்டிருந்தாலும் இந்த நிறுவனத்தின் பதிவுகளை (Registration) அங்கு மேற்கொண்டு தமது நாட்டின் கூடிய வரிவிதிப்பில் இருந்து தப்பித்துக் கொள்கின்றன. உதார ணமாகக் கடந்த 10 ஆண்டுகளில் கனடியர்கள் பாபடோஸ் (Barbados) தீவில் 390 பில்லியன் (Billion) டாலரும் இதேபோன்று கேமன் தீவில் (Cayman Island) 175 பில்லியன் டாலரும் முதலீடு செய்திருக்கிறார்கள். 2011ம் ஆண்டு புள்ளிவிபரப்படி 2011ம் ஆண்டு மாத்திரம் முக்கிய மான 5 வரிக்கான சொர்க்கபுரி நாடுகளில் (Tax Heaven Countries) கனடியர்கள் முதலீடு செய்துள்ளதாக கனேடிய புள்ளிவிபரம் கூறுகின்றது.

Barbados – $ 53.3 Billion, Cayman Island - $ 25.8 Billon, Ireland - $ 23.5 Billion
Luxembourg - $ 13.8 Billion, Bemuda - $ 13.2 Billion

இதன்மூலம் கனேடிய அரசு வருடாவருடம் பெரும்தொகையாக பெற வேண்டிய வரி வருமானத் தினை இழப்பதாகக் கூறப்படுகிறது. 2010ம் ஆண்டு 1700 கனடியர்கள் சுவிஸ் வங்கிக் கணக்கில் தமது பணத்தினைப் பதுக்கி வைத்திருந்ததினைக் கண்டறிந்தது. இந்த விடயத்தினை ஊடக மூலம் வெளிக்கொண்டுவந்த பெருமை கனேடிய ஆங்கில ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் (Canada Broadcasting Cooperation), Globe And Mail என்ற பத்திரிகைக்கும் உரியதாகும். இத்தகைய செயல்பாடு கனடிய அரசுக்குரியது மாத்திரமல்ல. இப்படியாக உலகத்தில் உள்ள செல்வந்த குடும்பங்களும் தனிப்பட்டவர்களும் ஏறத்தாழ $ 21 Trillion தொடக்கம் $ 32 Trillion வரியில் இருந்து தப்புவதற்காக இப்படியான நாடுகளில் முதலீடு செய்திருப்பதாக Tax Justice Network என்னும் அமைப்பு கூறுகின்றது. அமெரிக்காவும் வருடாவருடம் ஏறத்தாழ 150 பில்லியன் டாலர் வரி வருமானத்தினை இழப்பதாகக் கூறப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் வருடத்திற்கு ஏறத்தாழ 1.3 Trillion அமெரிக்க டாலர்களை வரி வருமானத்திலிருந்து இழக்கின்றது.

இன்று ஆசியா, ஆபிரிக்கா, தென்னமெரிக்க நாடுகளில் அரசியலில் ஊழல்கள் மலிந்து, அதன் மூலம் பெறும் வருமானத்தினை அரசியல் தலைவர்கள் பதுக்கிவைப்பதற்கும் இத்தகைய வசதிகள் இருப்பதுதான் காரண மாக அமைகின்றது. எமது தாயகத்திலும் சரி அதற்கு அயல் நாட்டிலும் சரி நடைபெறும் ஊழல்கள் முற்றுமுழுதாக இறுதியில் நிரூபிக்க முடியாமல் போவதற்கும் இந்த Tax Heaven Countries (வரிகளுக்கான சொர்க்கபுரி நாடுகள்) தான் காரணமாக அமைகின்றனதெனக் கூறலாம்.●


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available



647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]
Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
**416 261 4737**

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
**416 266 3077**

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**


## பிறசர் (உயர் இரத்த..)

பிரசர் உள்ளவர்கள் மேலும் செய்ய வேண்டிய பரிசோதனைகள்

1. இரத்தத்தில் கொலஸ்டரோல் அளவு (Lipid Profile)
2. சிறுநீரில் புரதம் போகிறதா என அறிய சிறுநீர்ப் பரிசோதனை (Urine Full report)
3. சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கிறதா என அறிய இரத்தப் பரிசோதனைகள் (Blood Urea, Creatinine)
4. குருதி உப்பு அளவுகள் (Serum Electrolytes)
5. ஈசிஜி (ECG)
6. ஆல்ரா சவுண்ட் ஸ்கான் (Ultrasound Scan abdomen Kidney)
7. வருடம் ஒருமுறையாவது கண்பரிசோதனை- விழித்திரையில் குருதிக் கசிவு, நீர்க் கசிவு ஆகியவற்றால் பார்வை இழப்பைத் தவிர்ப்பதற்காக

பிரஸரைக் கட்டுப்படுத்த, அல்லது அது வராமலே தடுக்க நீங்கள் செய்ய வேண்டியவை எவை?

1. உங்கள் எடையை உங்கள் உயரத்திற்கு ஏற்ற அளவில் சரியாகப் பேணுங்கள்
2. உங்கள் வாழ்க்கை முறையில் உடல் உழைப்புக்கு அல்லது உடற் பயிற்சிக்கு போதிய இடம் கொடுங்கள்
3. உங்கள் உணவு முறைகளை நல்லாரோக்கியத்திற்கு ஏற்றதாக மாற்றுங்கள். முக்கியமாக எடை அதி-கரிக்கக் கூடிய இனிப்பு, கொழுப்பு, மற்றும் துரித உணவுகளைக் குறைத்த காய்கறி, பழவகைகள் ஆகியவற்றை அதிகளவில் சேருங்கள்
4. உணவில் உப்பின் அளவைக் குறையுங்கள்
5. புகைத்தலைத் தவிருங்கள்
6. மதுவையும் தவிருங்கள், முடியாவிட்டால் அதன் அளவைக் கட்டுப்படுத்துங்கள்.
7. உங்களுக்குச் சிபார்சு செய்யப்பட்ட மருந்தை ஒழுங்காக உபயோகியுங்கள்.
8. மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ வேண்டாம்.●


**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை

**அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூர் புனித அந்தோனியார் கல்லூரி 140வது வருட விழா

காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியின் 140வது வருட பூர்த்தியை முன்னிட்டு கனடாக் கிளை நடத்திய விழா அதன் தலைவர் தோமஸ் ரட்ணசாமியின் தலைமையில் ஸ்காபரோவில் நடைபெற்றது. இலங்கையிலிருந்து கல்லூரியின் அதிபர் ஜேம்ஸ் சிங்கராயர் வருகை தந்து சிறப்பு விருந்தினராகப் பங்கு பற்றினார் விழாவின் சில படங்களை இங்கு காணலாம். (படங்கள்: குயின்ரஸ் துரைசிங்கம்)







## கணினி உலகின் புதிய கண்டுபிடிப்பு: MeRAM

SDRAM, DDR, DDR2, DDR3 என்ற வரிசையில் புதிதாக MeRAM (Magneto Electric Random Access memority) எனும் புது வகை நினைவகம் கடந்த மாதம் 2012 IEEE International Electron Devices Meeting in San Francisco வில் அறிமுகம் செய்யப்பட்டது. "Voltage-Induced Switching of Nanoscale Magnetic Tunnel Junctions" எனும் தலைப்பில் நடந்த கருத்தரங்கில் MeRAM பற்றிய தகவல்கள் முதன் முதலில் வெளியிடப்பட்டன.

spin-transfer torque (STT) எனப்படும் மின் காந்த தொழில்நுட்பத்தில் மின்சாரத்தில் உள்ள நகரும் எலெகட்ரான் மூலம் தகவல்களை நினைவகத்தில் எழுதும் புதிய முறையை கண்டுபிடித்துள்ளனர். Electron களில் உள்ள காந்தப் பண்பான "சுழற்சி" (Magetic property of elctrons – referred as spin in addition to their charge) எனும் வகையில் இந்த ஆராய்ச்சி நடந்துள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் சில சிக்கல்களை சந்தித்தனர், அதிக தகவல்களை எழுத முற்படும்போது அதிக எண்ணிக்கையில் Electron களை சுழலச் செய்வதால் அதிக மின்சாரமும் அதிக வெப்பமும் ஏற்பட்டது. இதை தவிர்க்க மின்சாரத்தில் உள்ள Voltage ஐ நேரடியாக பயன்படுத்திப் பார்த்தனர்.

இப்போது வெப்பமும் ஏற்படவில்லை அதே நேரத்தில் குறைந்த இடத்தில் அதிக தகவல்களை எழுத முடிந்தது. இதன் மூலம் மிகக் குறைந்த மின்சாரம்(10 – 1000 மடங்கு குறைவு), மிக அதிக வேகம், அதிக இடம் (5 மடங்கு) மற்றும் மிகக் குறைந்த விலையில் கணினி நினைவகங்களை உருவாக்க முடியும். கணினி மட்டும் அல்லாது செல்போன், TV போன்ற பிற மின்சாதனங்களில் இதை குறைந்த விலையில் பயன்படுத்த இயலும்.

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
35 வருட அனுபவம்

HONDA
TOYOTA
GM-MINI VANS
We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets

தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலகம்

## Aadalaham Dance Academy

றொறன்ரோ (டவுண்ரவுண்), ஸ்காபரோ, மார்க்கம் நகரங்களில்
பரதநாட்டிய வகுப்புகள் நடைபெறுகின்றன.



**அனோஜினி குமாரதாசன்** பி.ஏ.(நடனம்)
அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகம்

**Anojini Kumaradasan** B.A.(Dance)
Annamalai University Canada Campus

Bharathanatyam classes at the following locations:
Toronto (Downtown), Scarborough, Markham

**416 968 5975    416 710 5975**

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**
628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2


# தமிழர் தகவல் இதழ்களைத் தபாலிலும் பெறலாம்

தமிழர் தகவல் மாத இதழ்களையும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலரையும் தபாலில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தபாற் கட்டணம் செலுத்தி இதனைப் பெற விரும்புபவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும். அல்லது தஅமலைசனைநஒ½சயமபஅதஸைஒ.ஸஅ என்ற மின்னஞ்சலுக்கு விபரங்களை அனுப்பலாம்.

**416.920.9250**


SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or New!**



3/4 INCH HARDWOOD SUPPLIED AND INSTALLED $4.99

*Sabesan's Choice*

**416 605 1990**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

# நான்காவது ஆண்டில் தமிழ் மரபுரிமைத் திங்கள் ஜனவரி 2013

ஆரம்ப நாள் நிகழ்வு: ஜனவரி 8
செவ்வாய்க்கிழமை

ரொறன்ரோ பெருநகரிலும், மற்றைய நகரங்களிலும் இந்த மாதத்தில் பல்வேறு மரபுரிமை நிகழ்ச்சிகளும் ஆக்கத்திறன் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

ஒன்ராறியோவின் பல நகரசபைகளும் ஜனவரி மாதத்தை மரபுரிமை மாதமாக அதிகாரபூர்வமாகப் பிரகடனம் செய்துள்ளன.

விபரங்களுக்கு: இணையம் - tamilheritagemonth.com
தொலைபேசி - 416 824 3399


தமிழர் மரபுரிமை மாதத்தின் நோக்கம் நிறைவேறவும் நிகழ்வுகள் வெற்றிபெறவும் தமிழர் தகவல் வாழ்த்துகிறது!

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**A Proud Media Partner**
**Tamil Heritage Month - January, 2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

